வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P .1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.07.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 217 | பக்கங்கள் : 16







## கொழும்பிலிருந்து விசேட ரயில் நேற்று யாழ்ப்பாணம் வந்தது!

யாழ்ப்பாணம்,ஜூலை 14

கொழும்பிலிருந்து விசேட ரயில் நேற்று யாழ்ப்பாணம் வந்தது. முன்னதாக, இந்திய உதவியில் திருத்தியமைக்கப்பட்ட அநுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரதப் பாதை நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

15



## இந்திய தூதரை தொடர்ந்து அமெரிக்க தூதுவரும் சம்பந்தனை சந்தித்தார்!

கொழும்பு, ஜூலை 14

இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் இரா. சம்பந்தனின் இல்லம் தேடிச் சென்று சந்தித்த நிலையில்

15



## குருந்தூர்மலையில் இன்று பொங்கல் விழா!

முல்லைத்தீவு, ஜூலை 14

குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவில் அனைத்து தமிழ் மக்களையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் ஆதி ஐயனார் ஆலயம் இருந்த இடத்தை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்தது. அங்கு விகாரை இருந்ததாகக் கூறப்பட்ட நிலையில், விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கு எதிராக ஆலய நிர்வாக தரப்பினர் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கில் சட்ட விரோதமாக கட்டடங்களை அமைக்க நீதிமன்றம் தடை

15

## 13ஐ முழுமையாக அமுல்படுத்த ரணிலுக்கு அழுத்தம் கொடுங்கள்!

### இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு 6 தமிழ் கட்சிகள் கூட்டாகக் கடிதம்!

- சமஷ்டியே இறுதித் தீர்வு என்றும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 14

இந்தியாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாகக் கடிதம் அனுப்பியுள்ளன.

15

## பொங்கல் விழாவை எதிர்க்க தேரர் குழுவும் தயாராகிறது!

### மூவருக்கு எதிராக முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூலை 14

"தமிழ்த் தீவிரவாதிகள் இந்துக் குருமார்களையும் இணைத்து மிகப்பெரிய பூசை ஒன்றை நடத்தி ஆலயம் ஒன்றை நிறுவவுள்ளனர். இதற்கு எதிராக நாளை (இன்று) சிங்கள மக்கள் அனைவரையும் ஒன்றிணைய வேண்டும்", என்று குருந்தூர்மலை விகாரையின் விகாராதிபதி கல்கமுவை சாந்தபோதி தேரர் தனது சமூகவலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தூர்மலை ஆதி ஐயனாருக்கு இன்றைய தினம் பொங்கல் விழா முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிலையிலேயே மேற்கண்ட பதிவை குருந்தூர்மலை விகாரையின் விகாராதிபதி விடுத்துள்ளார்.

15

## பாதாள குழுக்களின் செயல்பாடு நாட்டில் தலைவிரித்தாடுகிறது!

### பொலிஸ், அரசியல்வாதிகள் ஆதரவு என்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 14

"எமது நாட்டில் பாதாளக் குழுக்களின் செயல்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. அதற்கு நிச்சயம் அரசியல்வாதிகள், பொலிஸாரின் ஆதரவுகள் - உதவிகள் இருந்தே தீரும்." - என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

"நாட்டில் துப்பாக்கிச் சூடுகள், கொலைகள் அதிகரித்துள்ளன. இதற்குக் காரணம் என்ன?" - என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே

15

## இந்தியா-இலங்கை இடையே எண்ணெய் குழாய் அமைப்பு!

### முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு

கொழும்பு, ஜூலை 14

இந்தியன் எரிபொருள் நிறுவனத்தின் (ஐ. ஓ. சி.) யோசனைக்கு அமைய தமிழ்நாட்டின் நாகபட்டிணம் - திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு இடையே எண்ணெய் குழாய் கட்டமைப்பை நிறுவுவது தொடர்பில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தலைமையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற

15

## சமஷ்டியை கோருவது தமிழர் உரிமை வழங்குவதா என முடிவு செய்வது அரசே!

### வீண் விவாதங்களை தவிருங்கள் என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜூலை 14

சமஷ்டி அதிகாரத்தைக் கோருவதற்கு தமிழர்களுக்கு - தமிழ் கட்சிகளுக்கு உரிமை உண்டு. அதனை வழங்குவதா இல்லையா என்பதை பாராளுமன்றமும் அரசாங்கமும் மட்டுமே முடிவு செய்யும். எனவே இது தொடர்பில் வீண் விவாதங்களை தவிர்க்க வேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பாக தமிழர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை எழுந்தமானமாக நிராகரித்து விட முடியாது.

15



## இராமேஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல்!

### தமிழக அரசு யோசனை

கொழும்பு, ஜூலை 14

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கான கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்குமாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் தமிழக அரசு வலியுறுத்தவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாகபட்டினத்துக்கு பதிலாக இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தை முன்னெடுப்பதற்கான திட்டமாக இந்த யோசனையை தமிழக அரசு

15

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி டெங்கு தடுப்பு உதவியாளர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 14

தமக்கான நிரந்தர நியமனத்தை விரைந்து வழங்குமாறு வலியுறுத்தி வடக்கு மாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2.15 மணி வரை யாழ். பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிமனைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திடீரென நடத்தப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள், "அரசே டெங்கு கள உதவியாளர்களை நிரந்தரமாக்கு, 22 ஆயிரம் ரூபாய் ஊதியம் எமது வாழ்வாதாரத்துக்கு போதுமா?", "வேண்டும்... வேண்டும்... எமக்கான நிரந்தர நியமனம் வேண்டும்", உள்ளிட்ட பல சுலோகங்களை தமது கைகளில் ஏந்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறுகோரி நாடு தழுவிய ரீதியில் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் கடந்த - 10ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வட மாகாணத்திலும் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படாத 82 டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் தொடர் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாகவே குறித்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை காலை சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்டதாக வடக்கு மாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மேற்படி போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகாரிகளை சந்தித்து வடமாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் சங்க நிர்வாகிகள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை கையளித்திருந்தனர். அத்துடன், தற்போதைய வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி போராட்ட நிறைவில் வடமாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்னைகளைக் கேட்டறிந்தார். இதுதொடர்பில் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார். (ஐ)



# ஒரு இலட்சம் வேலை திட்டத்தில் முல்லையில் 21 பேருக்கு நியமனம்!

முல்லைத்தீவு, ஜூலை 14

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிற்சியை நிறைவு செய்த 21 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்வாங்கப்பட்டு பயிற்சியை நிறைவு செய்த 21 பேர் சுகாதார பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நியமனம் வழங்கும் இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன்( நிர்வாகம்), மாவட்ட பிரதம கணக்காளர், ம. செல்வரட்ணம், மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் லிங்கேஸ்வரன், மாவட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து கொண்டனர். (ஐ)

# வாக்குமூலம் அளிக்க சென்ற மூதாட்டி திடீர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஒருவரின் இறப்பு தொடர்பில் வாக்குமூலம் அளிக்க யாழ். பொலிஸ் நிலையம் சென்ற வயோதிப பெண் ஒருவர் திடீரென வீழ்ந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

மல்லாவியை சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வாடகைக்கு வீடொன்றில் தங்கியிருந்தார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

இந்த நிலையில், இவரின் மரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அந்த வீட்டில் தங்கியிருந்த வயோதிப பெண்ணை வாக்குமூலம் அளிக்க பொலிஸ் நிலையத்துக்கு அழைத்திருந்தனர்.

வாக்குமூலம் அளிக்க பொலிஸ் நிலையம் சென்றிருந்த அந்தப் பெண் திடீரென மயங்கி வீழ்ந்தார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத்தெருவில் வசித்து வந்த 75 வயதான மூதாட்டியே இவ்வாறு மரணமானார். (ஐ)

# அரச அனுசரணையில் 'மலையகம் 200' விழா!

கொழும்பு, ஜூலை 14

'மலையகம் - 200' விழாவை நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மலையகத் தமிழர்களை கௌரவிக்கும் வகையிலும் அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையிலும் விழா ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் அமைச்சரவை பத்திரமொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு அறிக்கை மூலம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, அரச அங்கீகாரத்துடன் மலையகம் - 200 விழாவை எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நுவரெலியா மாவட்டத்தை மையப்படுத்தியும் நிகழ்வின் இறுதி நிகழ்வுகள் கொழும்பிலும் நடத்தப்படவுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மனித புதைகுழி விவகாரத்தால் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி

முல்லைத்தீவு, ஜூலை 14

1984ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிகின்ற வரைக்கும் இலங்கை படைகளின் முழுமையான ஆக்கிரமிப்பு பிரதேசமாக இருந்த கொக்குத்தொடுவாயில் பெரும் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை - பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பான விசேட கலந்துரையாடலில் நேற்று பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தம் முடிந்த காலப்பகுதியில் வட்டுவாகலில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்கள், படைகளிடம் சரணடைந்தவர்கள் இராணுவ



பேருந்துகளில் ஏற்றப்பட்டு இவ்வாறான பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என்ற செய்தி அந்த நாளில் இருந்தே வெளிவந்துகொண்டிருந்தது. இவ்வாறான நிலைமையில் இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பெரும் பதற்றத்தை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்தி இருக்கிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் அரசியல் தரப்புகள் எல்லாம் இந்த அகழ்வானது சர்வதேச நியமங்களுக்கு அமைய சர்வதேச கண்காணிப்பின் கீழ் அகழ்வுப் பணிகள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்களை பொறுத்தவரையில் உள்நாட்டிலே இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற அகழ்வுகள் மூலமாக தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதுதான் எங்களுடைய அனுபவமாக இருக்கிறது. அந்த வகையிலே, எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த வாரம் பாராளுமன்றத்திலும் இது தொடர்பாக வலியுறுத்தி இருக்கின்றார்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் அந்தப் பகுதி ஒப்படைக்கப்பட்டு அவர்களுடைய மேற்பார்வையிலேயே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் வலியுறுத்தி இருக்கின்றார்" - என்றார். (ஐ)

# திரிபோஷா உற்பத்தி வழமைக்கு திரும்பியது

கொழும்பு, ஜூலை 14

திரிபோஷா உற்பத்தி மற்றும் விநியோகம் தற்போது வழமையான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாதாந்தம் 13 இலட்சம் பைக்கெற்றுக்கள் அளவில் திரிபோஷ உற்பத்தி செய்யப்படுவதாக நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன கூறினார்.

2023ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 37 இலட்சம் திரிபோஷ பைக்கெற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாதாந்தம் தேவைப்படும் திரிபோஷவை உற்பத்தி செய்வதற்காக 15 மெற்றிக் தொன் கிலோ அளவிலான சோளம் அவசியமாக உள்ளதாக திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன கூறினார்.

இந்த தொகையை உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாததன் காரணமாக அவை இந்தியாவில் இருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

கர்ப்பவதி தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் 3 வயதிற்கு அதிகமான குழந்தைகள் ஆகியோருக்கு மாத்திரமே தற்போது திரிபோஷா வழங்கப்பட்டு வருவதாக திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.07.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 28
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அமிர்தலிங்கமும் இந்திய - இலங்கை ஒப்பந்தமும்

இலங்கை தமிழரசு கட்சியின் காலஞ்சென்ற தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 34ஆவது நினைவுதினம், நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டிருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் அமிர்தலிங்கத்தை நினைவுகூருவதில் பின்நின்ற தமிழரசு கட்சி இப்போது அவரை நினைவுகொள்கின்றது. அமிர்தலிங்கத்தை நினைவுகூரும் இந்த மாதம் இன்னொரு வகையிலும் நினைவுகொள்ளக் கூடியது. அதாவது, இந்த மாதம் 29ஆம் திகதிதான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டப்பட்டது.

இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவதில் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் அமிர்தலிங்கத்தின் நினைவுதினமும் வந்திருக்கின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பில் அமிர்தலிங்கம் என்ன கூறினார் - என்பது இப்போது, அவர் தலைமை தாங்கிய தமிழரசு கட்சியினருக்குக்கூட நினைவிருக்குமா என்பது சந்தேகம்தான்.

இன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பில் பலரும் பலவாறாகப் பேசலாம் - ஆனால், அது இடம்பெற்ற காலத்தின் அரசியல் சூழல் வேறு. போராளி மற்றும் துரோகி - இரண்டு சொல்லால் மட்டுமே தமிழ்த் தேசிய அரசியல் அளவிடப்பட்ட காலமது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு பயணிப்பதா அல்லது அதனை எதிர்த்துக் கொண்டு வேறு வழியில் செல்வதா என்னும் நிலைமை உருவாகியது.

இந்த சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் இடம்பெற்று சரியாக 11ஆவது நாளில் தமிழ்நாட்டில் அமிர்தலிங்கம் ஓர் உரையாற்றியிருந்தார். "இந்திய - இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்ற பின்னர்தான் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் நிம்மதியாகப் படுத்து உறங்குகின்றார்கள் - நாளை என்ன நடக்குமென்னும் ஏக்கமின்றி வாழ்கின்றார்கள் - வெளியில் சென்றவன் உயிருடன் வீடு திரும்புவானா அல்லது இல் லையா என்னும் கவலையின்றி வாழ்கின்றார்கள்.", இதன் பொருள் என்ன? இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தமிழரசு கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை - அதன் விளைவான மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அமிரால் எவ்வாறு இவ்வாறு பேச முடியும்? தமிழரசு கட்சியின் இப்போதைய தலைவர் மாவை சோதி ராசாவுக்கு இவ்வாறான விடயங்களை புரிந்துகொள்ள முடியுமா?

இன்று காலம் அதிகம் கடந்துவிட்ட பின்னரும்கூட வேறு தெரிவுகளின்றி அந்த ஒப்பந்தத்தையே பின்தொடர வேண்டியிருக்கின்றது. ஆனால், அன்றிருந்த வாய்ப்புகள் இன்றில்லை. அன்றிருந்த இந்தியாவும் இன்றில்லை. அன்றிருந்த இந்திய பரிவும் இப்போதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்தியாவின் தலையீட்டைக் கோரி மீண்டும் தமிழ் கட்சிகள் முயற்சிக்கின்றன.

ஆனாலும் அனைவரும் ஓரணியாக முயற்சிக்க முடியவில்லை. தனித்தனி கடிதங்கள், தனியான அணுகுமுறைகள் - கோரிக்கைகள், ஈழத் தமிழர் மீதான இந்தியாவின் கரிசனையை மட்டுப்படுத்தும் - அதேவேளை, அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களையும் மட்டுப்படுத்தும். ஏனெனில், பாதிக்கப்பட்ட தமிழர் மத்தியில் இந்தியா தொடர்பில் தெளிவான நிலைப்பாடில்லாத போது இந்தியாவால் ஒரு கட்டத்துக்கு மேல், செயலாற்ற முடியாமல் போகலாம். எனவே, காலத்தைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப புத்திசாதுர்யமாக நடந்துகொள்ள மறுத்தால் நிலைமைகள் மேலும் சிக்கலடையும்.

# சம்பந்தனை இந்திய தூதர் நேரில் சென்று சந்தித்தார்!

### ஜனாதிபதி இந்தியா செல்லவுள்ள நிலையில்

கொழும்பு, ஜூலை 14

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாமலுள்ள அனைத்து விடயங்களையும் செயற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கோரியுள்ளார்.



இந்த விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகத் தூதுவர் பதிலளித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன், அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் செயலர் நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்தனர். இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றது.

சந்திப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையொட்டிய பேச்சுக்கள் எல்லாம் அவருக்குத் தெரியும். நாட்டின் தலைவராகத் தெரிவாகிய பின்னர் முதல் தடவையாக அவர் இந்தியாவுக்குச் செல்கின்றார். இதன் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கின்றார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாத பகுதிகளைச் செயற்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் அழுத்தம் கொடுக்கவேண்டும். குறிப்பாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வலியுறுத்தவேண்டும் என்று சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயத்தை உடனடியாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தெரியப்படுத்துவதாக தூதுவர் கோபால் பாக்லே உறுதியளித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் முடிவடைந்த பின்னர் என்ன நடந்தது என்பதை மீண்டும் சந்தித்து விளக்கமளிப்பதாகவும் தூதுவர் பாக்லே, சம்பந்தனிடம் தெரிவித்தார்-என்றார். (அ)

## அம்பன், குடத்தனை பகுதிகளில் வெங்காய செய்கை அமோகம்!

வடமராட்சி, ஜூலை 14

வடமராட்சி கிழக்கின் அம்பன், குடத்தனை பகுதிகளில் இம்முறையும் பல நூறு ஏக்கர்களில் வெங்காய செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



வருடாந்தம் ஆனி, ஆடி மாதத்தில் இடம் பெறும் குறித்த வெங்காய பயிர் செய்கை வழமையைவிட அதிகமாக நடைபெற்று வருகிறது.

அம்பன், குடத்தனை, மட்டுமின்றி பருத்தித்துறை, மந்திகை, தம்பசிட்டி, கரவெட்டி உட்பட பல கிராம விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் அம்பன், குடத்தனை பிரதேசங்களில் விளையும் வெங்காயத்துக்கான கேள்வியும் விலையும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 02)

## தமிழரசு பிரமுகர் வீட்டில் திருட்டு!


கொழும்பு, ஜூலை 14

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ். குலநாயகம் வீட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திருட்டு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை பணிமனையாக இயங்கும் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் நித்திரையில் இருந்த சமயத்தில் இரண்டு கைபேசிகளும் சிறுதொகைப் பணமும் திருடப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூலை - 14 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆனி 29**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : துவாதசி**




**மேடம்**
கடந்த 2 நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி மன அமைதி கிட்டும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. வர வேண்டிய பணம் கைக்கு வரும். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. குடும்பத்தில் சண்டை சச்சரவு நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**மிதுனம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வாகனம் தொந்தரவு தரும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். ஆதாயம் தரும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பிள்ளைகள் பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனைத் தீர்க்க உதவிகள் கிடைக்கும். புதிய நபர்களால் பயன்அடைவீர்கள்.

**சிம்மம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள், செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வீர்கள்.

**கன்னி**
கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறைக் கூறிக் கொண்டிருக்கவேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும்.

**தனுசு**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் தேடிவந்து பேசுவார்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. வெளிவட்டாரத்தில் புது அனுப வம் உண்டாகும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்துப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

# மேகதாது அணை சர்ச்சைக்குள் பெங்களூர் செல்கிறார் ஸ்டாலின்

சென்னை, ஜூலை 14

மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடக அரசின் நடவடிக்கைகளை எதிர்த்துவரும் தி. மு. க. பெங்களூரில் நடக்கும் எதிர்க்கட்சிகளின் 2ஆவது கூட்டத்தில் பங்கேற்குமா என்று கேள்வி எழுந்த நிலையில் முதல்வர் ஸ்டாலின் கூட்டத்தில் பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் பா. ஜ. கவை எதிர்க்க எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து போட்டியிட திட்டமிட்டுள்ளன.

இதனையடுத்து 2ஆவது கூட்டத்தை ஜூலை 13, 14ஆம் திகதிகளில் கர்நாடகா மாநிலம் பெங்களூரில் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால், காவிரி மற்றும் மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசின் நடவடிக்கைகள் காரணமாக எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பெங்களூரில் கூட்ட தி. மு. க. எதிர்ப்பு தெரிவித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே 13, 14ஆம் திகதி நடக்க இருந்த கூட்டமும் இரத்து செய்யப்பட்டது. இதற்கு தி. மு. கவின் எதிர்ப்பு காரணமாக இருக்கலாம் என சொல்லப்பட்டது.

ஆனால், மீண்டும் கூட்டம் ஜூலை 17, 18ஆம் திகதிகளில் பெங்களூரில் நடக்கும் என காங்கிரஸ், அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது. இந்தக் கூட்டத்தில் மொத்தம் 24 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் பங்கேற்கும் கட்சி பிரதிநிதிகளுக்கு சோனியா சார்பில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பெங்களூரில் நடக்கவுள்ள இக்கூட்டத்தில் தி. மு. க. பங்கேற்குமா என்ற கேள்வி எழுந்தது. இந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் 2ஆவது கூட்டத்தில் பங்கேற்க 17ஆம் திகதி முதல்வர் ஸ்டாலின் பெங்களூர் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழக அரசை கண்டித்து 20ஆம் திகதி போராட்டம்!

## அ. தி. மு. க. அறிவிப்பு

சென்னை, ஜூலை 14

"விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தத் தவறிய தி. மு. க. அரசாங்கத்தைக் கண்டித்தும், அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்தாடுவதைக் கண்டித்தும் அனைத்து வருவாய் மாவட்டத் தலை நகரங்களில் வரும் 20ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்" - என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தி. மு. க. அரசு ஆட்சியை பொறுப்பேற்ற இந்த இரணடாண்டு காலத்தில், தமிழகத்தில் மக்கள் வாழ்வே கேள்விக்குறியாகி உள்ளது. மக்கள் அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்தும் பொருட்களின் விலைகளும் தற்போது கடுமையாக உயர்ந்துள்ளது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவதாக வெற்றுத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் அரசு, அதை முறையாக செயல்படுத்தவில்லை. விலைவாசி உயர்வு காரணமாக, சாதாரண ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வாழவே முடியாத சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

கழக ஆட்சிக் காலங்களின் போது, இயற்கை இடர்பாடுகளாலும், இன்னும் சில காரணங்களாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு ஏற்படும் நேரங்களில், அ. தி. மு. க. அரசு தனிக் கவனம் செலுத்தி, அதற்கு ஏற்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அயல் மாநிலங்களில் இருந்து காய்கறி உள்ளிட்ட மளிகைப் பொருட்களை கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாக மக்களின் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யப்பட்டதுடன், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை கட்டுக்குள் வைத்தது அ. தி. மு. க. அரசு என்பதை இந்த நேரத்தில், நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்நிலையில், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தத் தவறிய திமுக அரசைக் கண்டித்தும் அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்து ஆடுவதைக் கண்டித்தும் இவைகளை எல்லாம் கண்டும் காணாமல் இருந்து வரும் பொம்மை முதல்வர் மு. க. ஸ்டாலினை கண்டித்தும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 20ஆம் திகதிவியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில், வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் - என்றார். (ஐ)

# தி. மு. க. கூட்டணி கட்சிகள் அ. தி. மு. கவுடன் இணையும்

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை, ஜூலை 14

மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்கள் உள்ளன. எது வேண்டுமானாலும் நடக்கலாம். கண்டிப்பாக பல கட்சிகள், தி. மு. க. கூட்டணியிலிருந்து விலகி, அ. தி. மு. கவுடன் சேர வாய்ப்புள்ளது என்று அ. தி. மு. கவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

மதுரையில் ஒகஸ்ட் 20ஆம் திகதி நடைபெற உள்ள அ. தி. மு. க. பொன்விழா மாநாட்டு ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது.

இதன் பின்னர், முன்னாள் அமைச்சர்டி.ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில், புதிய வரலாற்றை உருவாக்கும் வகையில், இதுவரை தமிழகமே கண்டிராத எழுச்சி மாநாடு நடைபெற உள்ளது. இது குறித்து இக் கூட்டத்தில் ஆலோசித்தோம்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. இதை சரி செய்ய முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்டோர் போராட்டம் செய்ததைத் தொடர்ந்து, முதல்வர் ஆய்வுக் கூட்டம் நடத்துகிறார். இந்தக் கூட்டத்தால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

அதிமுகவில் இருந்து சென்றவர்கள் மன்னிப்புக் கடிதம் அளித்தால், மீண்டும் கட்சியில் சேர்க்கும் நடைமுறை ஜெயலலிதா காலத்தில் இருந்தே நடைமுறையில் உள்ளது. ஆனால், இது ஓ. பி. எஸ்., சசிகலா, டி. டி. வி. தினகரன் ஆகியோருக்குப் பொருந்தாது.

தி. மு. க. கூட்டணியில் உள்ள கட்சிகள் அதிருப்தியில் உள்ளன. மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்கள் உள்ளன. எது வேண்டுமானாலும் நடக்கலாம். கண்டிப்பாக பல கட்சிகள், தி. மு. க. கூட்டணியிலிருந்து விலகி, அ. தி. மு. கவுடன் சேர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# பொலிஸ் மா அதிபரின் நியமனம் சட்டவிரோதம்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 14**

**பொலிஸ்மா அதிபராக சி.டி. விக்கிரமரத்னவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நியமித்துள்ளமை சட்டவிரோதமானது என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.**

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் பிரகாரம் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும்போது அரசியலமைப்புப் பேரவையின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு நடைமுறை பின்பற்றப்படவில்லை. ஆதலால், பொலிஸ் மா அதிபரின் நியமனம் சட்டத்துக்கு விரோதமானதாகும்.

நாட்டில் இப்போது பொலிஸ் மா அதிபர் என்று எவரும் கிடையாது.

பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. எனினும், இதுவரை பொருத்தமான ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்துவதற்கு அரசாங்கத்தால் முடியவில்லை.

சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட ஒருவரை பொலிஸ் மா அதிபராகக்கொண்டு இயங்கும் பொலிஸார், சாதாரண பொதுமக்களுக்கு நியாயத்தை எவ்வாறு நிலைநாட்டுவார்கள் என நாம் அரசாங்கத்திடம் கேட்கிறோம்-என்றார். (அ)

# சஜீவவின் வீட்டில் திருட்டு!

கொழும்பு, ஜூலை 14

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஜீவ சேனசிங்கவுக்கு சொந்தமான கண்டி ஹந்தான வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடொன்றை திருடர்கள் உடைத்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீட்டில் சஜீவ சேனசிங்கவின் தாயார் வசித்து வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

அறையொன்றின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 200,000 ரூபாவும், 1 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களும் பெறுமதியான மோட்டார் வாகன பற்றறி என்பனவும் திருடப்பட்டதாக சேனசிங்க கண்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் பணிபுரியும் ஊழியர்கள் இருவரினால் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் சேனசிங்க பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அந்த ஊழியர்கள் பொலிஸ் காவலில் எடுத்து விரிவான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (அ)

## போதையில் பயணிகள் பஸ் செலுத்தியவரின் சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு இரத்து!

யாழ்ப்பாணம், ஜூலை 14

போதையில் தனியார் பேருந்தை செலுத்தியவரின் சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு மாதச் சிறைத்தண்டனையும் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பருத்தித்துறை- கொடிகாமம் மார்க்கத்தில் நேற்று முன்தினம் சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் ஒன்றின் சாரதி, மதுபோதையில் நிதானமில்லாமல் பஸ்ஸை செலுத்தியதை அவதானித்த நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் அவரை கைது செய்தனர்.

சாரதி நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியபோது, அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை 12 மாதங்களுக்கு இரத்து செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன், போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு ஒரு மாத சிறைத்தண்டனையும் விதித்தார். (அ)

# சனத் நிஷாந்தவுக்கு எதிரான மனு செப்ரெம்பர் 27 வரை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 14

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறப்படும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 03 மனுக்களை செப்ரெம்பர் 27ஆம் திகதி மீள விசாரணைக்கு அழைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சனத் நிஷாந்த மன்றுக்கு அழைக்கப்பட்டார்.

சட்டமா அதிபர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்த முறைப்பாடு தொடர்பில் குரல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், அதனை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்தினர் முன்னிலையில் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

அப்போது, மனுவொன்றை சமர்ப்பித்திருந்த இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இவ்வாறான விசாரணையின்றி இந்த மனுவை பராமரிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

அதன்படி, மனுவை செப்ரெம்பர் 27ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டது.

இந்த மனுக்களை பிரியலால் சிறிசேன மற்றும் விஜித குமார ஆகிய இரு சட்டத்தரணிகள் மற்றும் இலங்கை சிரேஷ்ட அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ளனர்.

ஒகஸ்ட் 23, 2022 அன்று பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய சனத் நிஷாந்த, மக்கள் போராட்டச் செயற்பாட்டாளர்களுக்கு பிணை வழங்குவதில் நீதவான்கள் செயற்பட்ட விதத்தை விமர்சித்திருந்தார்.

அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும், இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

# இறக்குமதி செய்யப்படும் பால்மா வரி அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 14

இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கான சுங்க வரியை திருத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 01 கிலோ பால் மாவுக்கு 100 ரூபா வரி அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால் மாவுக்கு 20 வீதம் அல்லது 225 ரூபா சுங்க இறக்குமதி வரி விதிக்கப்பட்டு கடந்த காலங்களில் அதனை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கலாசாலையில் பண்டிதர் கலாநிதி திருநாவுக்கரசுவிற்கு கௌரவம்



யாழ்ப்பாணம், ஜூலை 14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம் பெற்று வரும் நூற்றாண்டு சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வில் 12.07.2023 புதன் காலை 8.30 மணிக்கு கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு - கோப்பாய் ஆசிரிய கலாசாலை கடந்த நூறாண்டுகளில் சாதித்த விடயங்களை எவை? என்ற பொருளில் பேருரை ஆற்றினார். உரையாற்றிய அவரை கலாசாலை அதிபர் ச. லலீசன் பிரதி அதிபர் க. செந்தில்குமாரன் கலாசாலை முகாமைத்துவ சபை உறுப்பினர் சிவலோஜனி சுரேந்திரன் ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர். (அ)

# மாறுவேடத்தில் விகாரையை விட்டு வெளியேறிய பிக்கு சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூலை 14

ஹுதரலியத்த தம்பிட விகாரையின் பிரதம குரு முருத்தெனிய சீலரத்ன தேரர், சாரம் மற்றும் ரீசேர்ட், தொப்பி அணிந்த நிலையில் வீதியில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் ஹுதரலியத்த பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த பௌத்த பிக்குவின் சடலம் நேற்று முன் தினம் காலை விகாரையில் இருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் வீதியில் கண்டெடுக்கப்பட்டது. 67 வயதான பிக்குவே சடலமாக மீட்கப்பட்டார்.

சடலத்தின் அருகே காய்கறிகள் உள்ள பை கண்டெடுக்கப்பட்டது.

வீதியில் ஒருவர் விழுந்து கிடந்ததை அவதானித்த மக்கள், அவர் யார் என ஆராய்ந்த போது, விகாரையின் தலைமை விகாராதிபதி என்பது தெரிய வந்தது.

இவர் செவ்வாய் இரவு விகாரையில் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அவர் நள்ளிரவில் விகாரையை விட்டு வெளியேறியிருக்கலாம் என்றும், திரும்பி வரும் வழியில் இறந்துவிட்டதாகத் தெரிகிறது என்றும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விகாரையில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இடத்துக்கு மாறுவேடத்தில் பிக்கு பயணித்துள்ளதாக பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. பிக்கு சடலமாக கிடந்த இடத்தில் அவரது கைத்தொலைபேசியும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்ததன் மூலம் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காண முடியும் என பொலிஸார் தெரிவித்தனர்.

பிக்கு மாறுவேடத்தில் விகாரையை விட்டு வெளியேறி, யாரையோ சந்திக்கச் செல்லும் முன், சந்திக்கச் சென்ற நபரிடமிருந்து தோருக்கு தொலைபேசியில் அழைப்பு வந்துள்ளதாக பொலிஸார் நம்புகின்றனர்.

குறித்த நபர் நேற்று முன்தினம் காலை பிக்கு சடலமாக கிடந்த இடத்துக்கு வந்து கண்ணீர் விட்டு அழுததாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி, அந்த நபர் யார் என்பது கிராம மக்களுக்கு பகிரங்கமாக தெரிந்த இரகசியம் என்றும், அந்த நபர் இரவில் விகாரைக்குச் சென்று பிக்குவை சந்திப்பது வழக்கம் எனவும் கூறப்படுகின்றது.

இந்த பயணத்தை இரகசியமாக வைத்திருக்க பிக்கு மாறுவேடத்தில் விகாரையை விட்டு வெளியேறியிருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவரது உடலில் தாக்கப்பட்டதற்கான அடையாளங்களோ அல்லது வாகனம் விபத்துக்குள்ளானதற்கான அடையாளங்களோ இல்லை என பொலிஸார் கூறினர். மாரடைப்பு காரணமாக மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாகவும், பிரேத பரிசோதனைக்கு பிறகு காரணம் தெரியவரும் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

# டிஜிற்றல் சேவை வரி குறித்து கலந்துரையாடப்படவில்லை!

## சர்வதேச நாணய நிதியம் விளக்கம்

கொழும்பு, ஜூலை 14

தற்போதைய வேலைத்திட்டத்தில், டிஜிற்றல் சேவை வரி குறித்து எவ்வித கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் புதிய வரிகளை அமுலாக்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் அழுத்தம் கொடுப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதற்கு பதிலளிக்கும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கருத்துரைக்கையில்-

பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒழுங்கமைப்புகள் சர்வதேச உடன்படிக்கையில், கைச்சாத்திடுவதா இல்லையா என்ற எந்தவொரு பரிந்துரையையும் வழங்கவில்லை என குறிப்பிட்டார்.

நாட்டின் வருமானத்தை அதிகரிப்பது சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய நோக்கமாக உள்ள நிலையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் மீளாய்வின் ஒரு பகுதியாக, சர்வதேச கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

டிஜிற்றல் சேவை வரியை அமுல்படுத்துவதில் உள்ள சாதக மற்றும் பாதகத் தன்மை குறித்தும் அதன்போது அவதானம் செலுத்தப்படும்.

இலங்கை மக்களின் நன்மை கருதி, மறுசீரமைப்பை மேற்கொள்ள அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (அ)

# டெங்குத் தொற்றால் 33 பேர் பரிதாப பலி!

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் இவ்வருடம் இதுவரை டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, 52 ஆயிரத்து 21 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 25 ஆயிரத்து 944 இற்கும் அதிகளவானோர் டெங்கு நோயுடன் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முதல் 61 வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு தடுப்பு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் முதியவரைக் கடத்திய பெண் உட்பட மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் முதியவரைக் கடத்திச் சென்று அவரிடம் பணம் பறித்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த குறித்த முதியவர் பெண்ணொருவருக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள காணியொன்றை விற்பனை செய்யும் விதமாக அப்பெண்ணிடம் இருந்து முற்பணமாக 13 இலட்ச ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளார்.

எனினும் குறித்த காணியைப் அப்பெண்ணுக்கு விற்பனை செய்யாமலும் கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுக்காமலும் முதியவர் நீண்ட காலமாக இழுத்தடித்து வந்துள்ளார்.

இந்நிலையில் ஆத்திரமடைந்த குறித்த பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை , வாகனம் ஒன்றில் நான்கு ஆண்களுடன் முதியவரின் வீட்டுக்கு அருகில் சென்று முதியவரை வாகனத்தில் கடத்திச் சென்று தாக்கி அவரிடமிருந்து 13 இலட்ச ரூபாய் பணத்தினை பெற்றுக்கொண்டு பின்னர் முதியவரை விடுவித்துள்ளார்.

இந்நிலையில் முதியவர் தன்னைக் கடத்தி பணம் பறித்தவர்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டின் பிரகாரம் அப் பெண் உட்பட மூவரை மானிப்பாய் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அவர்களைத் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எரிபொருள் நிலையம் மீது பேருவளையில் தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 14

பேருவளை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குள் நுழைந்து ஊழியர்களை தாக்கி உடைமைகளுக்கு சேதம் விளைவித்த 5 பேரை பேருவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த கும்பல் மது அருந்திவிட்டு இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புவதற்காக வந்துள்ளது.

கியூ.ஆர். குறியீடு இல்லாததால் எரிபொருள் நிலைய ஊழியர் எரிபொருளை வழங்க மறுப்பு தெரிவித்த காரணத்தால் குறித்த கும்பல் ஊழியர்களை தாக்கிச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விவசாயிகளின் உற்பத்திகளை வாங்க மறுத்தால் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 14

விவசாயிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்ய மறுக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கான குத்தகை உரிமப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இதனை தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தகர்கள் இடைத்தரகர்கள் வாயிலாக காய்கறிகள் மற்றும் பழங்களை கொள்வனவு செய்து அதிக இலாபத்துக்கு விற்பனை செய்கின்றனர்.

இதனால் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

இந்த நிலையில் தற்போது பொருளாதார மத்திய நிலையங்களில் இடைத் தரகர்களிடம் காய்கறி மற்றும் பழங்களை பெற்றுக்கொள்ளும் வர்த்தகர்களின் வர்த்தக நிலையத்துக்கான குத்தகை உரிமப்பத்திரங்களை இரத்துச் செய்து ஏனைய வர்த்தக முயற்சியாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# வவுனியா கோயில்குளத்தில் வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு



வவுனியா, ஜூலை 14

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 34ஆவது வீரமக்கள் தினம், வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கழகத்தின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் மற்றும் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# 5 பூசகர்களின் கைபேசிகளை களவாடிய சக பூசகர் கைது!

கொழும்பு, ஜூலை 14

சக பூசகர்கள் ஐவரின் பெறுமதியான கையடக்க தொலைபேசிகளை திருடினார் எனும் குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உற்சவத்தில் பூசகர்கள் ஐவரின் தொலைபேசிகள் களவாடப்பட்டன.

அவற்றின் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் ரூபாய் என தெரிவிக்கப்படுகின்றது.

அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில், பூசகர்கள் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அன்றைய தினம் ஆலயத்தில் நின்ற 25 வயதான பூசகர் ஒருவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது திருடப்பட்ட 5 கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டன. (அ)

# எண்ணெய்க் குழாய் அமைத்தல் இலங்கை-இந்தியா இடையே பேச்சு

கொழும்பு, ஜூலை 14

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு எண்ணெய்க் குழாய் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில், இந்திய தூதுவர் கோபால் பாக்லே உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த நாட்டில் எரிபொருள் விநியோகத்தை விரைவுபடுத்துவதும், மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். (அ)

# வலம்புரிச் சங்குடன் ஆறு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 14

மிகவும் அரிய வகை பெறுமதியான வலம்புரிச் சங்கை 5 கோடிக்கும் அதிகமான விலைக்கு விற்க முயன்ற இரண்டு பெண்கள் உட்பட ஆறு சந்தேக நபர்கள் ஜா-எல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிந்திவளை, நிட்டம்புவ, மருதானை மற்றும் அங்கொடை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

இந்த வலம்புரிச் சங்கு விற்பனைக்கு தயாராக இப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த 6 பேரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# கல்லுண்டாய் மயானத்தை உடனே இடம்மாற்றுங்கள்!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 04

கல்லூரண்டாய் இந்து மயானத்தில் சடலங்கள்

எரிக்கின்ற புகை வீடுகளுக்குள் வருகின்றது. அந்த புகையை நாங்கள் சுவாசிப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றோம் என கல்லூரண்டாய்

குடியேற்றத்திட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் எங்களுக்கு இந்த கல்லூண்டாய் பகுதியில் குடியேற்றத் திட்டம் அமைத்து கொடுத்து எங்களை இங்கே குடியமர்த்தி இருக்கின்றார்கள். ஆனால் எங்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எங்களது குடியேற்றத் திட்டத்தில் இருந்து சுமார் 30 மீற்றர்கள் தொலைவில் ஆனைக்கோட்டை- கல்லூரண்டாய் மயானம் அமைந்துள்ளது. அந்த மயானத்தில் சடலங்கள் எரிக்கின்ற போது அந்த புகை எமது வீடுகளுக்குள் வருகின்றது.

இந்த புகையை சுவாசிப்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

இந்த மயானத்தை இடம் மாற்றுவதற்றி புதிய மயானத்தை அமைப்பதற்கான நிதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதாகவும், தற்போது மயானம் இருக்கின்ற

இடத்தை விட்டு தொலைவில் ஒரு காணியை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் காணியை ஒதுக்கித் தருமானால் அதில் புதிய மயானத்தை அமைக்க முடியும் என வலி. தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜெபநேசன், பிரதேச சபையில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி இருந்த காலப்பகுதியில் கூறினார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் இதற்காக சுமார் ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கூறுகின்றார். ஆனால் தற்போது பிரதேச சபையின் செயலாளர்எஸ்.சபேசன் புதிய மயானம் அமைப்பதற்கு நிதி இல்லை என்று கூறுகின்றார்.

ஏற்கனவே வரவு-செலவுத் திட்டத்தில் மயானம் அமைப்பதற்கு என ஒதுக்கப்பட்ட நிதி எங்கே?

மழை காலங்களில் மயானத்தில் இருந்து வெள்ளம் வீடுகளுக்குள் வருகிறது. இதனால் மயானத்தில் எரிக்கின்ற கழிவுகள் வெள்ளத்தோடு வீடுகளுக்குள் வருகின்றன.

பருவக்காற்று காலங்களில் பிணம் எரித்த சாம்பல் வீடுகளுக்குள் வருகின்றது.

இந்த அவல நிலைகள் அதிகாரிகளுக்கு தெரியுமா? இதனால் ஒரு உயிர் போனால் அந்த உயிரை அதிகாரிகளால் வழங்க முடியுமா?

இவ்வாறான சூழ்நிலைகளால் நோய்கள் ஏற்பட்டு சிலர் இங்கு இருக்க முடியாமல் உறவினர்கள் வீடுகளில் வசிக்கின்றனர். அவர்கள் இங்கு வசிக்கவில்லை எனக்கூறி அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான அடிப்படை தேவைகளை வழங்காமல் அவர்களை இங்கே இருங்கள் என்று எப்படிக் கூறமுடியும். அவர்களும் உயிருள்ள மனிதர்கள் தானே.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக இதனை கவனத்தில் கொண்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வழங்கிய காணியில் மயானத்தினை அமைப்பதற்கு

உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (அ)



# தனுஷ்கவை நேரில் சந்தித்தார் ஹரின்!

கொழும்பு, ஜூலை 14

ஆஸ்திரேலியாவில் பெண்ணொருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவை இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேரில் சந்தித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை, "உங்களைக் காண்பதில் மகிழ்ச்சி சகோதரரே"என்ற வாசகத்துடன் தனது சமூக வலைத் தளத்தில் ஹரின் பெர் னாண்டோ பதிவேற்றியுள்ளார். (அ)

# சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்திய இருவர் கைது

கொழும்பு, ஜூலை 14

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கடத்தி வரப்பட்ட 8 கிலோ கிராமுக்கும் அதிக அளவிலான தங்கத்துடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் கற்பிட்டி பகுதியில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, படகொன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 8.45 கிலோகிராம் அளவிலான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் 37 மற்றும் 42 வயது மதிக்கதக்கவர்கள் எனவும் அவர்கள் கற்பிட்டி மண்டலகுடா பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கைதானவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் 64 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவில்லை

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14

வடக்கு மாகாணத்தில் 200 பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளன எனவும் போருக்கு பின்னர் 64 பாடசாலைகள் இன்னமும் மீள ஆரம்பிக்கப்படவில்லை எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

100 இற்கும் குறைவான மாணவர்களை கொண்ட பல பாடசாலைகள் மூடப்படும் அபாய நிலையை எதிர்கொண்டுள்ளன.

இலங்கை முழுவதும் தற்பொழுது 35,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தலா 2000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதுடன், கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்து காணப்படுகின்றது.

மூதூர் கல்வி வலயத்தில் 1300 இற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆசிரியர் பற்றைக்குறையை உடனடியாக தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அது மட்டுமன்றி, இலவச கல்வியை சீரழித்து மாணவர்களிற்கு தொடர்ந்தும் அரசாங்கம் அநீதி இழைத்து வருகின்றது - என்றார். (அ)

# சட்டவிரோத வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை நடத்திய ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 14

பதுளையில், பதிவு செய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் ஒன்றை நடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஹாலி எல பகுதி அலுவலக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளிநாட்டுப் பிரஜை ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது அவர் கைதானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# மனித உரிமைக் கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்



யாழ்ப்பாணம், ஜூலை 14

சட்டத்திற்கான மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் மனித உரிமை தொடர்பான கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக ஊர்காவற்துறை பிரதேச செயளாளர் மஞ்சுளா தேவி சதீசனும், சிறப்பு விருந்தினராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜூம், கௌரவ விருந்தினர்களாக மனித உரிமை ஆலோசகர் ருக்கி பெர்ணாண்டோவும் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் நூறு மணித்தியாலங்களை உள்ளடக்கிய 6 மாத காலச் சட்ட மற்றும் மனித உரிமை கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 22 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸ்வெசும திட்டத்திற்கு 206 பில்லியன் ஒதுக்கீடு!

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக "அஸ்வெசும" நலன்புரித் திட்டத்திற்கு 206 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுடன் நடத்திய கலந்துரையாடல்களில் வறிய மக்களை அதிலிருந்து மீட்பதற்கு குறைந்தது 187 பில்லியன் ரூபாவை



ஒதுக்குமாறு பரிந்துரை செய்தது.

எனினும், இலங்கை அரசாங்கம் அதனை 206 பில்லியன் ரூபா வரை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளது.

வெளிப்படைத்தன்மையுடன் மிகவும் பொருத்தமான குழுவுக்கு இதன் கீழ் நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பயனாளர்கள் இந்த மாதத்திலேயே நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தில் சுமார் 20 இலட்சம் குடும்ப அலகுகளுக்கு நன்மைகள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்ப அலகுகளில் 70 சதவீதமான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன- என்றார். (அ)

# முள்ளிவாய்க்கால் அருகே புதைகுழியில் மனித எச்சங்கள்:

# சரணடைந்தவர்கள் கொன்று புதைப்பா?

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்பட்ட 20-க்கும் மேற்பட்ட 'மனித புதைக்குழிகள்" தொடர்பிலான விசாரணைகள் நிறுத்தப்பட்டதாக நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கடந்த ஜூன் மாதம் அறிக்கையொன்றின் ஊடாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நிலையில், மனித புதைக்குழிகள் தொடர்பிலான பேச்சுக்கள் மீண்டும் தொடங்கியுள்ளன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ஓரிரு தினங்களிலேயே மற்றுமொரு மனித புதைக்குழி தொடர்பிலான தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 29ம் தேதி குழாய் நீர் பொருத்தும் பணிகளுக்காக பிரதான வீதியோரத்தில் நீர்வழங்கல் அமைச்சினால் குழியொன்று தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது, பெண்களின் உள்ளாடைகள் மற்றும் மனித எச்சங்கள் என சந்தேகிக்கப்படும் எச்சங்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு விடயங்களை தெளிவூட்டியதுடன், குறித்த பகுதியில் மனித புதைக்குழி உள்ளதா என்பது தொடர்பிலான பூர்வாங்க அகழ்வு பணி கடந்த 6-ஆம் தேதி இடம்பெற்றது.

இதன்போது, குறித்த இடத்திலிருந்து மனித எச்சங்கள் என அடையாளம் காணப்பட்ட சில எச்சங்களை அதிகாரிகள் அடையாளப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவில் எங்கெங்கு 'மனித புதைக்குழி' அடையாளம் காணப்பட்டுள்ளது?**

இலங்கையில் 20க்கும் மேற்பட்ட பகுதிகளில் 'மனித புதைக்குழிகள்" அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் மூன்று இடங்களில் மனித புதைக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இலங்கையின் வடப் பகுதியிலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியிலேயே கடந்த 29ம் தேதி மூன்றாவது "மனித புதைக்குழி" அடையாளம் காணப்பட்டது.

ஏனைய இரண்டு புதைக்குழிகளும் முல்லைத்தீவு நகரிலிருந்து இருவேறு இடங்களில் அடையாளம் காணப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும், இலங்கை ராணுவத்திற்கும் இடையிலான இறுதி யுத்தம் முடிவடைந்த இடமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது.

இலங்கையில் மூன்று தசாப்த காலங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009ம் ஆண்டு மே மாதம் 19ம் தேதி நிறைவுக்கு கொண்டு வந்ததாக இலங்கை



அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், மே 18ம் தேதி ஆயிரக்கணக்கான தமது உறவுகளை இலங்கை ராணுவம் கொலை செய்ததாக யுத்தத்தில் நேரடி பாதிப்புக்களை எதிர்கொண்ட குடும்பங்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

**"மனிதப் புதைக்குழிகள்" காணப்படும் இடம் எப்படிப்பட்டது?**

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பகுதியிலேயே இறுதி கட்ட யுத்தம் இடம்பெற்றது.

இதில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட பலர் நந்திக்கடல் பகுதியில் வைத்தே கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதேஇடத்தில் வைத்து, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ராணுவத்திடம் சரணடைந்ததாகவும், அவ்வாறு சரணடைந்தவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் தமிழர்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை இலங்கை ராணுவம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது.

இறுதிக் கட்ட யுத்தம் முடிவடைந்த நந்திக்கடல் பகுதியிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவி



லேயே கொக்குத்தொடுவாய் பகுதி அமைந்துள்ளது.

கொக்குத்தொடுவாய் பகுதியானது 1984ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரையான காலம் வரை முழுமையாக ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

**காணாமல் ஆக்கப்பட்டோர் இங்கு புதைக்கப்பட்டனரா?**

இந்த 'மனித புதைக்குழியில்" தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு சொந்தமானது என கருதப்படும் சீருடைகள் காணப்பட்டமையினால், இது விடுதலைப் புலி உறுப்பினர்களுடைய எலும்பு எச்சங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை தமிழர்கள் வெளியிடுகின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் சுமார் 27 வருட காலம் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இடமொன்றில் இவ்வாறு மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டது, காணாமல் ஆக்கப்பட்டவர்களை ராணுவத்தினர் கொலை செய்து புதைத்திருக்கலாம் என அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மற்றும் முல்லைத்தீவு பிரதேச மக்களினால் வெளியிடப்படும் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை ராணுவத்திடம் வினவியபோது:

"எம்மால் அப்படி கூற முடியாது. ஏனெனில், அதனை உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இல்லை. மக்கள் குற்றஞ் சுமத்துவதில் அர்த்தம் கிடையாது. யுத்தத்தின் போது உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல, ராணுவத்தினரின் உடல்களும் தற்போதும் கிடைக்கின்றன. சரியான விசாரணைகள் மற்றும் ஆய்வுகளின் பின்னரே இது எந்த காலப் பகுதிக்கு சொந்தமான எச்சங்கள் என்பதை கூற முடியும். அடுத்தது இது மனித எலும்பு எச்சங்களா என்பதை தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும். விசாரணைகளின் பின்னரே சரியான தீர்மானத்திற்கு வர முடியும்." என ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவிக்கின்றார்.

**இலங்கையில் வேறு எங்கெல்லாம் 'மனிதப் புதைக்குழிகள்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?**

இலங்கையில் சுமார் 20திற்கு மேற்பட்ட "மனித புதைக்குழிகள்" அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஜே.டீ.எஸ், எப்.ஓ.டீ, சி.எச்.ஆர்.டி மற்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் ஆகிய நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த புதைக்குழிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்கள், தனது கடமையை சரிவர முன்னெடுக்கவில்லை என தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

'உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது. குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைக்குழிகள் உள்ள இடங்களுக்கு போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை. யாரேனும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டிருந்த ஒரு சில அரிதான வழக்குகளிலும் அந்த குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது." என அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

(மறுபக்கம் பார்க்க)



# முள்ளிவாய்க்கால் அருகே...



1983ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரின் சடலங்களை கொண்ட பாரிய மனிதப் புதைக்குழிகள் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டாலும், நூற்றுக்கணக்கிலாவது இலங்கையில் காணப்படுகின்றது என அந்த அறிக்கையில் கூறப்படுகின்றது.

**'மனிதப் புதைக்குழியில்' இதுவரை என்ன கிடைத்திருக்கிறது?**

இவ்வாறான மனிதப் புதைக்குழிகளில் 20 புதைக்குழிகளில் மாத்திரமே அகழ்வுப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன.

1983 - 2009ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆயுத மோதலின் போது, பாதுகாப்பு படையினரால் திட்டமிட்டும், பரந்தளவிலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களின் அப்பட்டமான நினைவுப்படுத்தலாக நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட இதர மனிதப் புதைக்குழிகளின் அகழ்வுப் பணிகள் காணப்படுவதாக அதில் கூறப்படுகின்றது.

மன்னாரில் அடையாளம் காணப்பட்ட மனித புதைக்குழியிலிருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களில் மாதிரிகள் ஆய்வுகளுக்காக அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வு கூடத்தில் பல வருடங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

எனினும், அந்த மனித எச்சங்கள் ஐரோப்பிய ஆதிக்க காலத்திற்கு சொந்தமானவை என அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வு கூட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மனித எச்சங்கள் 1477 - 1642 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு இடைப்பட்டவை என அந்த அறிக்கையின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த எச்சங்கள் மாற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் என அந்த ஆய்வுகளில் இலங்கை சார்பாக கலந்துக்கொண்ட சட்டத்தரணி ஒருவர், தெரிவித்தார்.

மன்னார் மனித புதைக்குழியிலிருந்து பெற்றுக்கொண்ட மனித எலும்பு எச்சங்களின் மாதிரி தடயங்கள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அது மாற்றப்பட்டுள்ளதாக பின்னரே தெரியவந்தது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதன்படி, உண்மையாக பெற்றுக்கொள்ளப்பட்ட




மாதிரிகளை மாற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

அதனால், தமிழர்களை கொண்டு இந்த ஆய்வுகள் நடத்தப்படுவது சிறந்ததாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிகின்றார்.

**தமிழ் அமைப்புகளின் கோரிக்கை என்ன?**

மனித புதைக்குழியொன்று தோண்டப்படுவது தொடர்பில் காணப்படும் சர்வதேச நியதிகளை மீறி,




இந்த புதைக்குழி தோண்டப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

முல்லைத்தீவு அகழ்வு பணிகளின் போது எவ்வாறான சர்வதேச நியதிகள் மீறப்பட்டுள்ளன என்பது குறித்து, பிபிசி ஆராய்ந்தது.

"பெக்கோ இயந்திரங்களை பயன்படுத்தி இந்த அகழ்வுகள் முன்னெடுக்கப்படக்கூடாது. வெற்று கைகளில் தடயங்களை எடுக்கக்கூடாது. ஆனால் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் நாம் முல்லைத்தீவு நீதவான் தலைமையில் 13ம் தேதி நடைபெறும் கலந்துரையாடலில் கருத்துக்களை முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம்," என பிரபல சட்டத்தரணியொருவர், தெரிவித்தார்.

**அடுத்த கட்டமாக என்ன நடக்கும்?**

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் அடையாளம் காணப்பட்டு, தற்போது கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வைக்கப்பட்டுள்ள மனித புதைக்குழி தொடர்பில் எதிர்வரும் நாட்களில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்த விசேட கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெறவிருந்தது.

நீதிபதி, நீதவான்கள், சட்ட மருத்துவ அதிகாரி, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட விடயம் சார்ந்த அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் கலந்துக்கொள்ளவுள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் எட்டப்படும் முடிவுகளின் பிரகாரமே அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அதிகாரிகள் பிபிசி தமிழிடம் தெரிவித்தனர்.

**பாதுகாப்பு அமைச்சின் பதில் என்ன?**


"மனித புதைக்குழிகள்" தொடர்பில் 4 தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான கேணல் நலின் ஹேரத், தெரிவித்தார்.

"நாம் இதனை நிராகரிக்கின்றோம். மிகவும் தெளிவாக கூறுகின்றோம். பாதுகாப்பு அமைச்சு இதனை நிராகரிக்கின்றது" என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கேணல் நலின் ஹேரத் குறிப்பிட்டார்.

**கூட்டறிக்கை தயாரித்த தன்னார்வ தொண்டு நிறுவனம் கூறுவது என்ன?**

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், வழக்குகளின் தரவுகள் உள்ளிட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கையை தாம் தயாரித்ததாக காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ தெரிவித்தார்.

'1994ம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின்



அறிக்கைகள் மற்றும் தேடிக் கொள்ளக்கூடியதாக இருந்த வழக்கு விசாரணை அறிக்கைகள், சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை எலும்பு எச்சங்கள் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கும் போது, சட்ட மருத்துவ அதிகாரியின் முத்திரை அதில் இருந்ததா என்பதை யார் அறிவார்கள்?. இதனுடன் தொடர்புடைய ஆவணங்களை அவர்களினால் காண்பிக்க முடியும். இந்தந்த இடங்களில் மனிதப் புதைக்குழிகள் இருந்தன என ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் உள்ளது. ஓகந்தர மனிதப் புதைக்குழியில் 24 மனித எலும்புக் கூடுகள் காணப்பட்டன. அந்த வழக்கிற்கு என்ன நடந்தது. அரசாங்கத்தின் அதிகாரப் பூர்வ அறிக்கைகள் மற்றும் அந்தந்த பிரதேசங்களில் வாழும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது." என காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

●

# இறக்குமதியான முட்டை சந்தையில் வணிக கூட்டுத்தாபனமே பொறுப்பு!

## அமைச்சர் மகிந்த அமரவீர

கொழும்பு, ஜூலை 14

வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் சந்தையில் காணப்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும், அரச வணிக கூட்டுத்தாபனமே ஏற்கவேண்டும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட முட்டை தட்டுப்பாடு காரணமாக, வெதுப்பகங்களுக்கும், சிற்றுண்டிச்சாலைகளுக்கும் மாத்திரம் வழங்குவதற்காக இந்தியாவில் இருந்து முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

எனினும், இந்த முட்டைகளை சந்தையிலும் காணமுடிவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குற்றஞ்சாட்டியிருந்தார்.



இதற்கு பதிலளித்த அமைச்சர் மகிந்த அமரவீர, குறித்த விடயம் தொடர்பில், ஆராய்வதற்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

உரிய முறையில் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாவிட்டால், அதனூடாக பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

# நாட்டில் தட்டம்மை நோய் மீண்டும் பரவும் அபாயம்!

கொழும்பு, ஜூலை 14

மத நம்பிக்கை காரணமாக குழந்தைகளுக்கு "தட்டம்மை தடுப்பூசி" செலுத்துவதை சிலர் தவிர்த்து வருவதாகவும், இதனால் தட்டம்மை நோய் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் குழந்தை நல மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட 15 குழந்தைகளில் 7 பேருக்கு தட்டம்மை நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் குறித்த குழந்தைகள் அனைவருக்கும் தட்டம்மை தடுப்பூசி செலுத்தப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த வைரஸ் சுவாசக் குழாய் வழியாக உடலுக்குள் நுழைந்து சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அறிகுறிகள் தோன்றும். காய்ச்சல், சளி, மூக்கு ஒழுகுதல் மற்றும் கண் சிவத்தல் ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகளாகும்.

சில மத நம்பிக்கைகள் காரணமாக தடுப்பூசி போடுவதை சிலர் தவிர்ப்பதால் அம்மை நோய் பரவும் அபாயம் உள்ளது - என்றனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டில் தெற்காசியாவில் தட்டம்மை நோயை இல்லாதொழித்த 5 நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டிய இரண்டு பேர் கைது

திருமலை, ஜூலை 14

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாலியபுர பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் இருவரை நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் சாலியபுர, பகுதியைச் சேர்ந்த 54 மற்றும் 55 வயதுடையவர்கள் எனவும் , அவர்கள் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் குறிப்பிட்ட சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)



# உகந்தை மகோற்சவம் 18 ஆம் திகதி ஆரம்பம்

அக்கரைப்பற்று, ஜூலை 14

உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

15 நாட்கள் தொடர்ந்தும் பூசைகள் இடம் பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெற்று வியாழன் 03 ஆம் திகதியன்று வைரவர் பூசையுடன் இவ்வருடத்திற்கான உற்சவம் இனிதே நிறைவு பெறும்.

அத்துடன் உகந்தை மலை முருகன் ஆலயத்திற்கு பாத யாத்திரை செல்லும் ஏற்பாடுகளும் கிழக்கில் இடம் பெற்று வருகின்றது.

இலங்கையில் காணப்படும் வரலாற்று சிறப்பு மிக்க தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

முருகக் கடவுளின் சூரசம்ஹார வரலாற்றுடன் மிக நெருங்கிய தொடர்புடைய திருத்தலமாக உகந்தை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் 108 டெங்கு நோயாளர் உயிரிழப்பின்றி காப்பாற்றப்பட்டனர்!

காரைதீவு, ஜூலை 14

கல்முனை ஆதார வைத்திய சாலையில் கடந்த ஆறு மாதங்களில் அனுமதிக்கப்பட்ட 108 டெங்கு நோயாளிகளும் எவ்வித உயிரிழப்புமின்றி காப்பாற்றப்பட்டு வீடு திரும்பியுள்ளனர்.

கடந்த ஆறு மாத காலத்தில் வைத்தியசாலைக்கு வருகை தந்த பல்வேறு தொற்று நோயாளர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (அ)






# கிழக்கைக் கையாள்வதற்கு செந்தில் தொண்டமான் யார்?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் ஹாபீஸ்

மட்டக்களப்பு, ஜூலை 14

**“கிழக்கு மாகாணம் செந்தில் தொண்டமானின் அப்பாவின் சொத்தல்ல. கிழக்கு மாகாணத்தைக்கையாள செந்தில் தொண்டமான் யார்?, இப்படி செயற்பட்டால் இங்கு இறங்க விடக் கூடாது - என்று கேள்வியெழுப்பியுள்ளார் அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹ்மத்.**

காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரியின் இடமாற்றம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப் பட்டது.

கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்த எம்.எம். ஹலாவுதீனின் இடமாற்றம் பிழையானது எனவும், அது நிறுத்தப்படல் வேண்டும் எனவும் இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அங்கு பேசும்போதே அமைச்சர் காரசாரமாகக் கிழக்கு மாகாண ஆளுநரை விமர்சித்தார்.

தான் முதலமைச்சராக இருந்ததாகவும், ஆனால் இப்படி செயற்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த கோரிக்கை

திருமலை, ஜூலை 14

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருடர்களின் கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். கந்தளாய் பகுதியில் திருடர்கள் இரவு வேளையில் தமது கைவரியை காட்டி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் திருட வந்த இரண்டு திருடர்கள் சிசிரிவி கமெமராவை கண்டதும் தலைதெறிக்க ஓடி உள்ளார்கள்.

போதைக்கு அடிமையானவர்கள் தான் இச் செயலில் ஈடுபட்டு வருவதாக கூறினர்.

இப்படியாக கந்தளாய் பகுதியின் பேராறு, ரஜஎல, மத்ரஸா நகர் மற்றும் மூன்றாம் கொலனி போன்ற கிராமங்ககளில் இரண்டு மூன்று வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் இரவில் தூக்கம் இன்றி தவித்து வருகிறார்கள். தனித்துக் குடியிருக்கும் வீடுகளிலும், ஆட்கள் குடியிருக்கும் வீடுகளிலும் துணிந்து திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவது சாதாரணமாகிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

# கிழக்கு மாகாண ஆளுநரினால் பண்ணையாளர்களுக்கு இழப்பீடு



மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 107 பண்ணையாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார்.

மட்டக்களப்பு கால் நடை திணைக்களத்தில் வைத்து கிழக்கு மாகாண ஆளுநரினால் 3.4 மில்லியன் ரூபா இவ்வாறு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் மொன்டோஸ் என்றழைக்கப்பட்ட குளிருடன் கூடிய சூறாவழி ஏற்பட்டதில் திறந்த வெளியில் வளர்க்கப்பட்ட கால்நடைகள் கிழக்கு மாகாணத்தில் அதிகளவில் இறந்தன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு கால்நடை திணைக்கள காரியாலயத்தில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஏ.எம்.பாசி தலைமையில் இடம்பெற்றது

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இழப்பீடுகளை வழங்கினார். இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

(அ)

# மண்டூரில் புதிய கலப்பின சோளம் விதைகள் அறிமுகம்!

மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தினால் வழங்கி வைக்கப்பட்ட உள்ளூர் கலப்பின சோளம் விதைகள் அறிமுகம் செய்யப்பட்டு, புதிய நடுகை முறையில் மண்டூர் விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட தம்பலவத்தை கிராமத்தில் நடுகை செய்யப்பட்டது.

அதன் வெற்றிகரமான அறுவடை விழா நேற்று தொழில்நுட்ப உத்தியோகத்தர் குலசிங்கம் கிலசனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா கௌரவ அதிதிகளாக வலயம் தெற்கு உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சித்திரவேல் மண்டூர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன் மேலும் பாடவிதான உத்தியோகத்தர் லக்ஸ்மன் விவசாய போதனாசிரியர் கோபி மற்றும் விவசாயிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



கலப்பின சோளம் விதைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு நடுகை செய்யப்பட்டுவரும் நிலையில், உள்ளூர் கலப்பின சோளம் விதைகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த உள்ளூர் கலப்பின சோளம் விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப் பட்டது.

அதனை படைப்புழு தாக்கத்தையும் எதிர்கொள்ளும் வகையில் புதிய நடுகைமுறையில் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட விவசாய கிணற்றில் கீழ் செய்கை பண்ணப்பட்டு தயாபரன் எனும் விவசாயி விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட புதிய தொழில்நுட்ப முறைகளை சரியான முறையில் பின்பற்றி வெற்றிகரமான அறுவடையை பெற்றுள்ளார்.

(அ)

# திக்கோடை ஆயுள்வேத மருந்தகத்தை திறந்துவைத்த கிழக்கு மாகாண ஆளுநர்



மட்டக்களப்பு, ஜூலை 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ், மாகாண விஷேட செயற்பாடுகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையில் ரூபா 13 மில்லியன் செலவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மேற்பார்வையோடு மட்டக்களப்பு - திக்கோடை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் திறந்து வைத்து பொதுமக்கள் பாவனைக்கும் கையளித்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை திறந்து வைத்தார்.

இவ்விழாவுக்கு இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கணகமுத்து கிரிஷ்ணபிள்ளை, வெல்லாவெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி, புதுக்குடியிருப்புதள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திருமதி ஜே.பாஸ்கரன், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.ஏ.நபீல், மாகாண சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(அ)

# நிந்தவூரில் 9.4 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை திறப்பு!



அக்கரைப்பற்று, ஜூலை 14

நிந்தவூரில் 9.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அல் - ஹிக்மா முன்பள்ளியின் இரண்டாம் மாடி கட்டடத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முன்பள்ளியை நிர்மாணிப்பதில் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப் பட்டது.

(அ)

# 735 மில்லியன் மக்கள் பட்டினியால் அவதி!

## ஐ.நா சுட்டிக்காட்டு

**ஜெனிவா, ஜூலை 14**

**உலகளாவிய ரீதியில் சுமார் 735 மில்லியன் மக்கள் பட்டினியால் அவதியுறுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த எண்ணிக்கை கொவிட் தொற்று பரவலுக்கு முன்னர் பட்டினியால் அவதியுற்றவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் 2030 ஆம் ஆண்டுக்குள் பட்டினி இல்லாத உலகை உருவாக்கும் இலக்கை அடைவதற்கு இது கடுமையான அச்சுறுத்தலாக அமையும் என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைமை பொருளாதார நிபுணர் மாக்சிமோ டோரெரோ சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



# கீவ் மீது ரஷ்யா தாக்குதல்! ஒருவர் பலி! 4 பேர் காயம்!!



கீவ், ஜூலை 14

உக்ரைன் மீது ரஷ்யா மூன்று நாட்களாக இரவுநேர தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

நேற்று முன்தினம் இரவு உக்ரைனின் தலைநகர் கீவை சுற்றியுள்ள பகுதிகளில் ரஷ்யா டிரோன் மூலம் நடத்திய குண்டுவீச்சில் ஒருவர் பலியாகியுள்ளார்.

மேலும், 4 பேர் காயமடைந்துள்ளனர். சில கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன.

கீவ் நகர மேயர் விடாலி க்லிட்ச்கோ, 'குண்டு வீச்சிற்கு பிறகு சோலோமியான்ஸ்கி, செவ்சென்கிவ்ஸ்கி, போடில்ஸ்கி, மற்றும் டார்னிட்ஸ்கி ஆகிய நகரங்களில் மீட்பு நடவடிக்கைக்காக அவசர உதவிக்குழுவினர் விரைந்தனர்' என தெரிவித்துள்ளார்.

உக்ரைன் தலைநகரின் மத்தியில் உள்ள சோலோமியான்ஸ்கி மாவட்டத்தில் ரஷ்ய டிரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது. (அ)

# அத்தியாவசியமற்ற விமானங்கள் தடை

## நேபாள அரசு உத்தரவு




காத்மண்டு, ஜூலை 14

எவரெஸ்ட் பகுதியில் ஏற்பட்ட விமான விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ள நிலையில் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு அத்தியாவசியமற்ற முறையில் விமான பயணங்களை நேபாள விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையம் தடை விதித்துள்ளது.

எவரெஸ்ட் சிகரம் உள்ளிட்ட இமயமலைச் சிகரங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பும் போது, விமானம் விபத்துக்குள்ளானதில், ஐந்து மெக்சிகோ சுற்றுலாப் பயணிகளும், தனியார் **Manang Air** நிறுவனத்தால் இயக்கப்படும் சிறிய விமானத்தின் நேபாள விமானியும் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர்.

இந்த நிலையில் அத்தியாவசியமற்ற விமானங்களின் பயணங்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை இடைநிறுத்தப்படும் என நேபாளத்தின் சிவில் விமான போக்குவரத்து ஆணையம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அத்துடன் நேபாளத்தில் பெய்து வரும் பருவமழை காரணத்தினால் இந்த விபத்து சம்பவத்து இருக்கலாம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை கடந்த ஜனவரி மாதத்தில் சுற்றுலா நகரமான பொஹாரா அருகே விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 71 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தில் கடந்த 30 ஆண்டுகளில் இடம்பெற்ற கடும் மோசமான விபத்து இதுவென அந்த நாட்டு ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (அ)

# 50 வயது குறைந்த காதலிக்கு ஆயிரக்கணக்கான கோடி சொத்தை எழுதி வைத்த முன்னாள் இத்தாலிப் பிரதமர்!



ரோம், ஜூலை 14

இத்தாலி நாட்டின் பிரதமராக 4 முறை சில்வியோ பெர்லுஸ்கோனி பதவி வகித்தார். அவருக்கு 2 மனைவிகள். 2020ஆம் ஆண்டில் மார்தா பாசினா என்ற பெண் எம்.பி. யுடன் அவருக்கு காதல் மலர்ந்தது. அப்போது அவருக்கு 83 வயது. மார்தாவுக்கு 33 வயது.

கடந்த மாதம் 12ஆம் திகதி பெர்லுஸ்கோனி உயிரிழந்தார். கிட்டத்தட்ட 5 பில்லியன் யூரோ மதிப்பிலான சொத்துகள் தொடர்பாக அவர் உயில் எழுதி வைத்துள்ளார். இதன்படி பெர்லுஸ்கோனியின் முதல் மனைவிக்கு பிறந்த மகன், மகளுக்கு பினின்வெஸ்ட் ஊடக நிறுவனத்தில் 53 சதவீத பங்குகளும் 2ஆவது மனைவிக்கு பிறந்த இரு மகள்கள், மகனுக்கு 47 சதவீத பங்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பெர்லுஸ்கோனிக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்களையும் முதல் மனைவி, 2ஆவது மனைவியின் குடும்பங்கள் இணைந்து நடத்தவேண்டும் என்று உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர பெர்லுஸ்கோனியின் தம்பி பியர், நெருங்கிய நண்பர் மார்செல்லோ ஆகியோருக்கும் சொத்துகள் ஒதுக்கியுள்ளார்.

கடைசி காலத்தில் காதலித்த மார்தா பாசினாவுக்கு 108.9 மில்லியன் டொலர் சொத்துகளை பெர்லுஸ்கோனி வழங்கியுள்ளார். இதன்படி இத்தாலியின் ஆர்கோர் பகுதியில் பிரமாண்ட வீடு மார்தாவுக்கு கிடைத்துள்ளது. இந்த வீடு இத்தாலியின் ஸ்டாம்பா மன்னர் குடும்பத்துக்குச் சொந்தமான 18ஆம் நூற்றாண்டு அரண்மனை ஆகும். கடந்த 1974ஆம் ஆண்டில் அரண்மனையை பெரும்தொகை கொடுத்து பெர்லுஸ்கோனி வாங்கியது குறிப்பிடத்தக்கது.

சில்வியோ பெர்லுஸ்கோனி - மார்தா பாசினா ஜோடி இந்த ஆண்டு மார்ச் மாதம் குறியீட்டு திருமணத்தை நடத்தியிருந்தனர். (அ)

# பாகிஸ்தானுக்கு 3 பில்லியன் டொலரை வழங்குவதற்கு நாணய நிதியம் அனுமதி!

ஸ்லாமாபாத், ஜூலை 14

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு, 3 பில்லியன் அமெரிக்க டொலரை பிணையெடுப்புக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் அனுமதியளித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு பின்னர், பாகிஸ்தானில் ஏற்பட்ட கடுமையான வெள்ள பாதிப்பும், அரசாங்கங்களின் தவறான பொருளாதார கொள்கையும் அந்த நாட்டின் பொருளாதாரத்தை தொடர்ச்சியாக பாதித்தது.

இதனால், தமது நாட்டின் அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதிக்கான நிதியின்மை மற்றும் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலைமை உள்ளிட்ட பல நெருக்கடிகளை பாகிஸ்தான் எதிர்நோக்கியது.

இதனையடுத்து தமது நட்பு நாடான சவுதி அரேபியாவிடம் இருந்து 2 பில்லியன் டொலரை பாகிஸ்தான் பெற்றிருந்தது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையும் பாகிஸ்தான் கோரியிருந்தது.

அந்தவகையில், பாகிஸ்தானுக்கு, 3 பில்லியன் அமெரிக்க டொலரை பிணையெடுப்புக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் அனுமதியளித்துள்ளது.

இதில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலரை முதல் தவணையாகவும், ஏனைய தொகை 9 மாதங்களில் செலுத்தப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியம் நாணய நிதியத்தின் இந்த பிணையெடுப்பானது தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளதாக பாகிஸ்தானின் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.



# 700 விக்கெட்களை வீழ்த்தினார் அஸ்வின்

டொமினிகா, ஜூலை 14

சர்வதேச கிரிக்கெட்டில் 700இற்கும் அதிகமான விக்கெட்களை கைப்பற்றிய மூன்றாவது இந்தியர் என்ற பெருமையை ரவிச்சந்திரன் அஸ்வின் பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அவர் இந்த சாதனை மைல்கல்லை எட்டியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, விளையாடி வருகிறது. இரு அணிகளும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தற்போது விளையாடி வருகின்றன.

நேற்று முன்தினம் தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியில் 150 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

இந்தப் போட்டியில் மொத்தம் 24.3 ஓவர்கள் வீசி 60 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்கள் கைப்பற்றி இருக்கிறார் அஸ்வின். இதில் 6 ஓவர்கள் ஓட்டமற்றவை. அஸ்வின், டெஸ்ட் கிரிக்கெட்டில் முன்னாள் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் ஷிவ்நரைன் சந்தர்போல் மற்றும் அவரின் மகனும், தற்போதைய மேற்கிந்தியத் தீவுகள் அணியில் விளையாடி வரும் டஜ்நரைன் சந்தர்போலின் விக்கெட்டை கைப்பற்றி அசத்தியுள்ளார்.

முதல் இன்னிங்ஸில் பிராத்வெயிட், டஜ்நரைன் சந்தர்போல், அலிக் அதனேஸ், அல்சாரி ஜோசப், ஜோமல் ஆகியோரின் விக்கெட்களை அவர் கைப்பற்றியிருந்தார்.

இதில் அல்சாரி ஜோசப் விக்கெட்டை வீழ்த்திய போது சர்வதேச கிரிக்கெட்டில் 700 விக்கெட்களை கைப்பற்றிய பந்துவீச்சாளர் என்ற சாதனை மைல்கல்லை அவர் எட்டினார். இதற்கு முன்னர் இந்திய அணிக்காக விளையாடிய வீரர்களில் அனில் கும்ப்ளே (956 விக்கெட்கள்), ஹர்பஜன் சிங் (711 விக்கெட்கள்) இந்த சாதனையை எட்டியுள்ளனர். (ஐ)

# விம்பிள்டன் ரென்னிஸ் சபலெங்கா அரையிறுதியில்

லண்டன், ஜூலை 14

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் 2ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

லண்டனில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி போட்டி ஒன்றில் 2ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா, 25ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் மேடிசன் கீஸை எதிர்த்து விளையாடினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அரினா சபலெங்கா 6-2, 6-4 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

அரையிறுதி சுற்றில் அரினா சபலெங்கா, 6ஆம் நிலை வீராங்கனையான துனிசியாவின் ஒன்ஸ் ஜபீருடன் மோதுகிறார். ஒன்ஸ் ஜபீர் காலிறுதி சுற்றில் நடப்பு சம்பியனும் 3ஆம்நிலை வீராங்கனையுமான கஜகஸ்தானின் எலெனா ரைபகினாவை ஒரு மணி நேரம் 53 நிமிடங்கள் போராடி 6-7(5-7), 6-4, 6-1 என்ற செற்கணக்கில் தோற்கடித்தார். (ஐ)





# ஆசிய மெய்வல்லுநர் போட்டி; இலங்கைக்கு இரு வெண்கலம்

பாங்கொக், ஜூலை 14

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் நேற்று புதன்கிழமை ஆரம்பமான 25ஆவது ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் இலங்கைக்கு 2 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் நடீஷா டில்ஹானி லேக்கம்கே தேசிய சாதனையுடன் வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

ஈட்டி எறிதல் போட்டியில் ஜப்பானின் மரினா சய்ட்டோ (61.67 மீற்றர்) தங்கப் பதக்கத்தையும் சீனாவின் லியு ஷியிங் (61.51 மீற்றர்) வெள்ளிப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர்.

பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை அணித் தலைவி கயன்திகா அபேரட்ன வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் நடீஷா டில்ஹானி தனது 5ஆவது முயற்சியில் 60.93 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து தேசிய சாதனை நிலைநாட்டி ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தார். (ஐ)

## இந்தியாவுடனான டெஸ்ட்

# 150 ஓட்டங்களுக்கு சுருண்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி!

டொமினிகா, ஜூலை 14

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி டொமினிகாவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இதில், நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அதன்படி முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் இந்திய பந்துவீச்சாளர்கள் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் விரைவாகவே வீழ்ந்தனர். குறிப்பாக, அஸ்வின் மற்றும் ஜடேஜாவின் சுழல்பந்து வீச்சை எதிர்கொள்வதில் தடுமாறினர்.

இதனால் முதல் இன்னிங்ஸில் 64.3 ஓவரில் 150 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது அந்த அணி. மேற்கிந்தியத் தீவுகளின் ஆலிக் அதானஸ் மட்டும் ஓரளவு தாக்குப் பிடித்து 47 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இந்தியா சார்பில் அஸ்வின் 5 விக்கெட்கள், ஜடேஜா 3 விக்கெட்கள் சிராஜ், ஷர்துல் தாகூர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதன்பின், முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ரோஹித் சர்மா களமிறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களை சேர்த்தனர். இதனால் முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 80 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஜெய்ஸ்வால் 40 ஓட்டங்களுடனும், ரோஹித் சர்மா 30 ஓட்டங்களுடனும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.



## விம்பிள்டன் ரென்னிஸ்:

# மெத்வதேவ், அல்காரஸ் அரையிறுதிக்கு தகுதி!

லண்டன், ஜூலை 14


கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றாகவும், மிக உயரியதாக மதிப்பிடப்படும் இந்த ஆண்டுக்கான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி சுற்று போட்டியில் தரவரிசையில் 3ஆவது இடம் வகிக்கும் ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ் அமெரிக்காவின் கிறிஸ்டோபர் யுபங்குடன் மோதினார்.

இதில் மெத்வதேவ் முதல் செற்றை வென்றார். சுதாரித்துக் கொண்ட யுபங் அடுத்த 2 செற்களையும் கைப்பற்றினார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக 4, 5ஆவது செற்களை மெத்வதேவ் வென்றார்.

இறுதியில் மெத்வதேவ் 6-4, 1-6, 4-6, 7-6 (7-4), 6-1 என்ற செற்கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸ், டென்மார்க் வீரர் ஹோல்ஜர் ரூனேவுடன் மோதினார். இதில் அல்காரஸ் 7-6 (7-3), 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)



ஈழநாடு



# கொட்டிலை பிடுங்கி எறிந்தனர் வனவளத் திணைக்களத்தினர்!

## புதுக்குடியிருப்பு கைவேலியில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூலை 14

**புதுக்குடியிருப்பு - கைவேலி பகுதியில் வனவள திணைக்கள அதிகாரிகள் முன்னாள் போராளி உள்ளிட்டவர்களின் கொட்டில்களை பிடுங்கி எறிந்தும் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளன.**

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு:-

கைவேலியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் - 2000ஆம் ஆண்டு 45 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. 2009 போர் முடிவடைந்த பின்னர் அந்தப் பகுதியில் இருந்தவர்கள் அங்கு குடியேறவில்லை.

இந்த நிலையில், 2012இல் இந்தப் பகுதியை வனவளத் திணைக்களம் வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியது. இந்த சமயத்தில், அந்த இடத்தை சேர்ந்த 20 குடும்பங்கள் அங்கு குடியேறின.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அந்தப் பகுதிக்குச் சென்ற வனவளத் திணைக்கள அதிகாரிகள் போடப்பட்ட கொட்டில்களைப் பிடுங்கி எறிந்தனர். அத்துடன் முன்னாள் போராளிகளான பெண் ஒருவரையும் ஆண் ஒருவரையும் தாக்கி விட்டு சென்றனர் என்று கூறப்படுகின்றது.



பாதிக்கப்பட்ட இருவரும் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வனவள திணைக்கள அதிகாரிகள் கொண்டு சென்ற மண்ணெண்ணெயைப் பறித்த அங்கிருந்த பொதுமகன் அதனை தன்மீது ஊற்றி தீக்குளிக்க முற்பட்டு மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளார் - என்று கூறப்படுகின்றது.

இந்த விடயத்தில் பொலிஸாரும் பக்கச்சார்பாக நடக்கின்றனர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

# பல்வேறு செயற்றிட்டங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவி

வடமராட்சி, ஜூலை, 14

திருகோணமலை மாவட்டம் - செல்வநாயகபுரம் பிரதேசத்தில் உள்ள உதயபுரி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமாரசுவாமி அறநெறிப் பாடசாலை கட்டடப் பணிக்காக 100,000 நிதி உதவி வழங்கப்பட்டது. ஆறாவது கட்டமாக இவ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இராச வீதி, கோப்பாயில் அமைந்துள்ள நவமங்கை நிவாசத்தினருக்கு கல்விச் செயற்றிட்ட உதவியாக 3ஆம் கட்டமாக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

மலையக பிராந்தியத்தில் உள்ள குடும்பத்தினருக்கு மரணச் செலவுக்காக உடனடித் தேவைக்காக 20,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

இவ் செயற்றிட்ட உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார். (அ-02)

# இந்தியாவிலிருந்து வரும் மயக்க மருந்து ஊசிகள்

கொழும்பு, ஜூலை 14

இந்தியாவில் இருந்து ஒரு தொகுதி மயக்க ஊசி மருந்துகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்குரிய மயக்க மருந்துகளுக்குப் பதிலாக மற்றொரு இந்திய மருந்து நிறுவனத்திடமிருந்து இந்த மயக்க மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ப்ரோபோல் ரக மயக்க மருந்து வகைகளை பாவனையில் இருந்து நீக்கியதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (மருத்துவ வழங்கல்) வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பேராதனை போதனா வைத்தியசாலையிலும் தேசிய கண் வைத்தியசாலையிலும் மயக்க ஊசி செலுத்திய பல நோயாளிகள் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பருத்தித்துறை இ.போ.சவுக்கு நான்கு புதிய பஸ் வண்டிகள்!

வடமராட்சி, ஜூலை 14

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்கு நான்கு புதிய பஸ் வண்டிகள் மத்திய போக்குவரத்துச் சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பஸ் வண்டிகள் கிராமப் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய பஸ் வண்டிகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் சிபாரிசின் பேரில் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசு இலங்கைக்கு கட்டம் கட்டமாக வழங்கிய 700 பஸ் வண்டிகளில் இருந்தே இப் பஸ் வண்டிகள் வழங்கப்பட்டன. (அ-02)

# 5 இலட்சத்தில் 31 ஆயிரம் பேரே நாட்டில் வரி செலுத்துகின்றனர்

## மகிந்தானந்த எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் தனிநபர் வருமான வரிக் கோப்புகள் 5 இலட்சமாக காணப்பட்டாலும் அவற்றில் 31 ஆயிரம் பேர் மாத்திரமே வரி செலுத்துகின்றனர். நாட்டில் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 328 நிறுவங்களிடமிருந்து 82 சதவீத வரி வருமானம் மாத்திரமே கிடைக்கப்பெறுகிறது என தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த வாரம் கூடிய தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டரசிறைச் சட்டத்தை திருத்துவது மற்றும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் வரி வருமானம் கிடைப்பதை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்றை உருவாக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டில் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் 105,000 பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இந்த நிறுவனங்களிலிருந்து 82 சதவீத வரி வருமானம் 328 நிறுவனங்களிலிருந்தே கிடைப்பதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் கடன் வழங்கும் போது அடைந்திருக்க வேண்டிய விடயங்களான நாட்டின் பணவீக்கம்? நாட்டின் அரசாங்க வருமானம் மற்றும் அரசாங்கம் அளவு மற்றும் தொடர்பான இரண்டாவது மீளாய்வு இடம்பெறும் டிசம்பர் மாதத்தில் மேம்படுத்தப்பட்ட நிலையில் இருப்பது முக்கியமானது என குழுவின் தலைவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம், மது வரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றுடன் தனது குழு தொடர்ந்தும் கலந்துரையாடல் மேற்கொண்டு அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான வசதிகளை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

வரி வருமானங்களை சேர்ப்பதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு முடியாமல் போயுள்ளமை தொடர்பில் விரிவாகக் கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர் வரி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு என்ற வகையில் அதில் சாதகமான தலையீட்டை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான 904 பில்லியன் ரூபாய் தொகையை அறிவிடுவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வரியை அறவிடுவதை முறைமைப்படுத்த உண்ணாட்டரசிறைச் சட்டத்தை திருத்துவதற்கும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்வது தொடர்பிலும் நீதி அமைச்சருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் தற்பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தனது உதவியை முழுமையாக வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

குழு கூட்டத்தில் கலந்துக் கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குறிப்பிடுகையில், தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதற்கு தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய குழுவினால் வழங்கப்படும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கு அரசாங்கத்தின் வரி வருமான இலக்கான 1.6 ட்ரில்லியன் ரூபாயை முதலாவது 6 மாதங்களில் 40 சதவீதமாகவும் இரண்டாவது ஆறு மாதங்களில் 60 சதவீதமாகவும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்ததாகவும், முதலாவது 6 மாதத்துக்கான இலக்கை தற்பொழுது அடைந்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். அத்துடன் அடுத்த 6 மாதங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது குழுவின் தலைவர் குறிப்பிட்டதாது, வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பொறிமுறையொன்று அமைப்பது அவசியமானது எனத் தெரிவித்தார். இந்நாட்டில் நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக வழங்கப்படும் தகவல்கள் உண்மையானவை அல்ல என்பதால் வரி அறவிடும் போது சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாக குழுவின் உறுப்பினர்களும் அதிகாரிகளும் சுட்டிக்காட்டினர். (ஐ)

# அமெரிக்காவிலிருந்து மேலுமொரு தொகுதி மருந்துகள் இலங்கைக்கு



கொழும்பு, 14

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், சிறுகுழந்தைகளுக்குத் தேவையான புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

53.03 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த மருந்துப் பொருட்கள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதாக அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## குருந்தூர்...

விதித்தது. ஆனால், இதை மீறி விகாரை கட்டிமுடிக்கப்பட்டது என்பதும் நினைவில்கொள்ளத்தக்கது. (ஐ)

## இந்திய...

நேற்று அமெரிக்க தூதுவரும் சென்று சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இலங்கையில் தமிழர்கள் மற்றும் பிற சிறுபான்மை சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான சமூகத்தின் கோரிக்கைகள் தொடர்பான விரிவான உரையாடப்பட்டதாக அமெரிக்க தூதுவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் செல்லவுள்ள நிலையில் இந்திய, அமெரிக்க இராஜதந்திரிகள் இரா. சம்பந்தனை தேடிச் சென்று சந்தித்தமை தென்னிலங்கை - தமிழ் அரசியல் பரப்பில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## பொங்கல்...

இதனிடையே, குருந்தூர்மலையில் தமிழர்கள் இந்து ஆலயம் ஒன்றை நிறுவ முயல்கிறார்கள் என்றும் இதனால், அங்கு இனமுறுகல் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் கூறி நேற்று முன்தினம் மூவருக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயல்பாட்டாளர் மயூரன், நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோருக்கு எதிராகவே இந்த முறைப்பாட்டை அவர் செய்துள்ளார். (ஐ)

## கொழும்பிலிருந்து...

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து புறப்பட்டுச் சென்ற யாழ்தேவி ரயிலில் போக்குவரத்து மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட உள்ளிட்டவர்கள் அநுராதபுரத்தை சென்றடைந்தனர்.

அங்கு அமைச்சரை யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர். இதன்போது, அண்மையில் கம்பஹா - தாரளுவயில் வெட்டி அகற்றப்பட்ட க்ரூடியா ஷீலனிகா (Crudia Zeylanica) எனப்படும் இலங்கைக்கே உரித்தான மரக்கன்று அமைச்சர் பந்துல குணவர்தனவால் ரயில் நிலைய வளாகத்தில் நாட்டப்பட்டது.

இதையடுத்து, திருத்தியமைக்கப்பட்ட புகையிரதப் பதையூடாக யாழ்ப்பாணம் நோக்கி ரயில் பயணித்தது. இந்த விசேட ரயில் பயணத்துக்காக M11 ரக எந்திரம் மற்றும் குளிரூட் டப்பட்ட சொகுசு ரயில் பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன.

வவுனியா - ஓமந்தை ரயில் நிலையத்தை வந்தடைந்த விசேட ரயிலுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்போது, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே சொகுசு கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் இதன்போது கூறினார்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் ரயிலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில் சேவை சுமார் 6 மாதங்களுக்கு மேலாக புகையிரதப் பாதை புனரமைப்பு பணியால் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை நாளை சனிக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியா...

கலந்துரையாடலில் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் , பெற்றோலிய கூட்டுத்தாபனம் , பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம், பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இந்தியன் எரிபொருள் நிறுவனத்தின் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

எரிவாயு மற்றும் பெற்றோலியத்துக்காக இரண்டு குழாய்களை அமைத்து இரு நாடுகளையும் இணைக்கும் சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராயுமாறு இதன்போது கோரிக்கை விடுத்ததாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜயசேகர ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. இந்த எண்ணெய் தாங்கி தொகுதியை இந்தியன் எரிபொருள் நிறுவனம் கூட்டு தொழில் முயற்சியாக தற்போது மேம்படுத்தி வருவதுடன், எண்ணெய், எரிவாயு மற்றும் பெற்றோலிய ஆய்வுக்கான மத்திய நிலையமாக திருகோணமலையை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியா பயணமாகும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரு நாடுகளுக்கும் இடையிலான மின்சக்தி மற்றும் எரிசக்தி துறைகள் குறித்து கவனம் செலுத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அண்மையில் தெரிவித்திருந்தார்.

## 13ஐ முழுமையாக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவை இணைந்து தயாரித்த இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ. பி. ஆர். எல். எவ்.வின் தலைவர் க. சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகளின் தலைவர் இ. கதிர், மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில்,

1956ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் சமஷ்டியை வலியுறுத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் விருப்பமாகவும் - இறுதித் தீர்வாகவும் சமஷ்டியே உள்ளது.

எனினும், தற்போதைய நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலமாக உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவிடம் வலியுறுத்த வேண்டும் அத்துடன், மாகாண சபைகள் தேர்தலை நடத்தவும் அழுத்தம் கொடுக்க வேண் டும் என்றும் அந்தக் கடிதத்தில் கோரப் பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமாக செல்லவுள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வருத் 21ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளார். இதன்போது, தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை இந்தியப் பிரதமர் வலியுறுத்த வேண்டும் என்று கோரி தமிழ் கட்சிகள் அவருக்குக் கடிதம் எழுதி வருகின்றன. முன்னதாக சமஷ்டி தீர்வை வலியுறுத்தியும் 13ஐ வலியுறுத்த வேண்டாம் என்றும் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் ஒன்றை அனுப்பியது. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணியின் கடிதம் நேற்று இந்திய தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)



# இந்தியா வழங்கிய பஸ்கள் வடக்குக்கும் பகிர்ந்தளிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 14

இந்திய கடன் உதவித் திட்டத்தில் இலங்கைக்கு கிடைத்த பேருந்துக்களில் வடக்கு மாகாணத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 24 பேருந்துகளை இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு மாகாண சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜன் உட்பட அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## பருப்பு என கூறி இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உழுந்து!

கொழும்பு, ஜூலை 14

பருப்பு என்ற போர்வையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 39,000 கிலோகிராம் உழுந்து இலங்கை சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

48,000 கிலோ கடலை பருப்பு என கூறி 482,550 ரூபா சுங்க வரியாக செலுத்தப்பட்ட 2 கொள்கலன்களில் இந்த உழுந்து கண்டிபிடிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட உழுந்தின் சந்தைப் பெறுமதி 62 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.(அ)

## பாதாள...

அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உயர் பொலிஸ் அதிகாரியுடன் இது பற்றிப் பேசினேன். கடந்த வருடம் நாட்டில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட போராட்டங்களை கட்டுப்படுத்துவதிலேயே பொலிஸார் நிறுத்தப்பட்டனர். இதனால் பாதாள குழுவினரின் செயல்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க முடியாமல் போனது. இதனால் அவர்களின் செயல்பாடுகள் அதிகரித்துள்ளன. இப்போது நாட்டில் அந்த ஆர்ப்பாட்டங்கள் போன்ற நிலைமை இல்லை. இதனால் பாதாள குழுக்களை அடக்குவதற்கான செயல்பாடுகளில் இறங்கியுள்ளோம் என்று அந்த அதிகாரி கூறினார்.

அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் போதைப்பொருள் வர்த்தகம் செய்யவோ பாதாளக் குழுக்களின் செயல்பாடுகளை முன்னெடுக்கவோ முடியாது என்பது சர்வதேசமே ஏற்றுக்கொண்ட உண்மை.

அதேபோல், எமது நாட்டில் பாதாள குழுக்களின் செயல்பாடுகள் தலை விரித்தாடுகின்றன. அதற்கு நிச்சயம் அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவுகள் - உதவிகள் இருந்தே தீரும்.” - என்றார். (ஐ)

## சமஷ்டியை...

அவர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து, அந்தத் தீர்வை வழங்குவதா இல்லையா பாராளுமன்றமும் - அரசாங்கமுமே முடிவு செய்ய முடியும்.

எனவே அதிகாரப் பகிர்வு தொடர்பில் விமர்சனக் கருத்துகளை முன்வைத்து மீண்டும் நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்த வேண்டாம் என்று சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன் - என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தியாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணிலிடம் சமஷ்டி அதிகாரப் பகிர்வை வலியுறுத்த வேண்டும் என்று தமிழ்த் தரப்புகள் கோரிக்கை முன்வைத்து வருகின்றன. இந்த நிலையில்,

தமிழர்கள் கோரும் சமஷ்டியை ஒரு போதும் அரசாங்கம் வழங்காது. அதனைக் கோருவது பயனற்றது என்று அரச தரப்பு ஆளும் கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இராமேஸ்வர...

முன்வைத்துள்ளது என்று தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை - புதுச்சேரி கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க இரு நாட்டு அரசாங்கங்களும் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல் அணையும் மேடை பயணிகள் முனையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

புதுச்சேரிக்கு பதிலாக காரைக்காலில் இருந்து கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க இந்திய மத்திய அரசு விருப்பம் தெரிவித்திருந்தது. எவ்வாறாயினும் இந்த கப்பல் சேவையை ஆரம்பிக்கும் நடவடிக்கை தொடர்ந்தும் இழுபறியில் உள்ளது.

இதனிடையே, தமிழக கடல்சார் சபை வாயிலாக இராமேஸ்வரம் - தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் - காங்கேசன்துறை ஆகிய வழித்தடங்களில் கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பும் சட்டசபையில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், நாகபட்டினத்துக்கு பதிலாக இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க தமிழக அரசு விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# ‘13’விடயத்தில் சம்பந்தன் இரட்டை நிலைப்பாட்டில்!

## சித்தார்த்தன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 14

**இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தும் விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் இரட்டை நிலைப்பாட்டுடன் உள்ளார் என புளொட் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தமிழ் மக்களின் இனப்பிரச்னைக் கான இறுதித் தீர்வான சமஷ்டி நோக்கிய நகர்வின் முதல்படியாக 13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என இந்தியப் பிரதமரை தாம் கோரியுள் ளதாகவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

அத்துடன் 13ஐ நடைமுறைப் படுத்துமாறு கோரும் தமது தீர்மா னத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதாக முன்வைக்கப்படும் விமர்சனங்களையும் அவர் நிரா கரித்தார்.

குறிப்பாக 13 ஐ கோரும் கடிதத்தில் தாம் கையெழுத்திடப் போவதில்லை என இரா.சம்பந்தன் கூறியதாகவும் எனினும், இதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந் திரமோடிக்கு, 13ஆவது அரசிய லமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெ னக்கூறி அனுப்பப்பட்ட கடிதத்தில் இரா.சம்பந்தனும் கையெழுத்திட் டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட் டினார். (அ)

# பாப்பரசரின் பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே யாழ்ப்பாணம் மறை மாவட்டத் துக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அவருடைய வருகையை முன்னிட்டு சிறப்பு ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட குரு முதல்வர் ஜோ.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வத்திக்கானின் இலங்கைக்கான பிரதிநிதி இந்த மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் மறை மாவட்டத் திற்கு வருகை தரவுள்ளார்.

குருநகர் யாகப்பர் ஆலயத் திருவிழாவில் அவர் கலந்து கொள்ளவுள்ளதுடன், தொடர்சியாக யாழ். மாவட்டத்தில் பல்வேறுபட்ட இடங்களுக்கு சென்று கத்தோலிக்க அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுமக்களையும் சந்தித்து கலந்துரையாட வுள்ளார் - என்றார். (அ)

# துப்பாக்கி சூட்டு காயங்களுடன் ஆணின் சடலம் மீட்கப்பட்டது!

கொழும்பு, ஜூலை 14

துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் ஆண் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை - வலஸ்முல்லை பிரதேசத்தில் வீதியோரத்தில் குறித்த சடலம் கண்டெடுக்கப்பட் டுள்ளது.

வீரகெட்டிய பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப் பட்டார்.

குறித்த நபர், வலஸ்முல்லை பிரதேசத்திலுள்ள மரக்கறி சந்தை ஒன்றில் உதவியாளராகப் பணியாற்றி னார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பாதாளக் குழுக் கள் செயல்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக் கின்றனர்.

சடலத்தை உடல்கூற்றுப் பரிசோதனைக்காக வைத் தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரூபாவின் ஸ்திரதன்மைக்கு அமைய பால்மா விலை தீர்மானிக்கப்படும்!

கொழும்பு, ஜூலை 14

சுங்க வரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பால்மா விலையில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர் பில் ரூபாவின் ஸ்திரத்தன்மைக்கு அமைய தீர்மானம் மேற்கொள்ளப் படும் என பால்மா உற்பத்தியாளர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2 வாரங்களுக்கு தேவையான பால்மா கையிருப்பில் உள்ளதாக அந்த சங்கத்தின் உறுப்பினர் லக்ஸ்மன் வீரசூரிய தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதியின் பின்னர் செலவுகள் தொடர்பில் மீளாய்வு செய்யப் படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இறக்குமதி செய்யப்படும் பால்மா கிலோ ஒன்றுக்காக 100 ரூபா சுங்க வரி விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் இந்த வரி விதிப்பு அமுலானது. ஒரு கிலோ கிராம் பால்மா விற்கான வற் வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரியாக 200 ரூபா அறவிடப்படுகிறது.

இந்த புதிய சுங்க வரி விதிப்பின் மூலம் பால்மாவுக்காக 300 ரூபா வரி அறவிடப்படுகின்றமை குறிப் பிடத்க்கது. (அ)

# கொழும்பு - காங்கேசன்துறை ரயில் சேவை 15 இல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 14

வடக்கு ரயில் சேவை அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரையிலான பாதை நவீனமயப்படுத்தப் பட்டுள்ளது.

சுமார் ஐந்து மாதங்களுக்குப் பின் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான ரயில் சேவை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுக் காலை கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து அனுராதபுரம் தொடக்கம் வவுனியா வரை நவீனமயப்படுத்தப்பட்ட பாதையை அவதானிப்பதற்காக விசேட ரயில் பயணத்தை மேற் கொண்டார். (அ)

# அமிர்தலிங்கத்தின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வலி.மேற்கில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கத்தின் 34ஆவது ஆண்டு நினை வேந்தல் நேற்று வலி. மேற்கு பிர தேச சபையின் முன்னால் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலையடி யில் இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுரு வச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி, மலர் அஞ்சலி தூவி நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழர சுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட்டின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினரு மான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பி



னர் ஈஸ்வரபாதம் சரவணபவன், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்த அஞ் சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மத்திய வங்கி சட்டமூலம் 20ஆம் திகதி விவாதம்!

கொழும்பு, ஜூலை 14

மத்திய வங்கி சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தை எதிர்வரும் 20ஆம் திகதி நடத்துவ தற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மா னித்துள்ளது.

இதேவேளை, ஊழலுக்கு எதிரான சட்டமூலம் மீதான விவாதம் எதிர்வரும் 19ஆம் திகதி நடத்தப்பட வுள்ளது.

பாராளுமன்றம் ஜூலை 18 முதல் 21 வரை நடை பெற உள்ளது.

ஒவ்வொரு நாளும் காலை 9.30 முதல் 10.30 மணி வரை வாய்வழி பதில் தேவைப்படும் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு



வடமராட்சி, ஜூலை 14

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) சார்பில் போராடி உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வீரமக்கள் தினம் நேற்று நினைவுகூரப்பட்டது.

வடமராட்சி - இராஜகிராமத்தில் இந்த நினைவேந் தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் இராஜ கிராம இணைப்பாளர் சொக்கன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில், புளொட் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், ஜன நாயக மக்கள் விடுதலை முன்னணியின் வடமராட்சி இணைப்பாளர் பரஞ்சோதி மற்றும் சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் கிஷோர் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் எதிர்க்கட்சி தலைவரான அ. அமிர்தலிங்கம் மற்றும் புளொட் அமைப்பின் தலை வர் உமாமகேஸ்வரன் ஆகியோரின் திருவுருவ படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதோடு நினைவுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், இராஜ கிராமத்தின் முன்பள்ளி களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 60 முன் பள்ளி மாணவர்களுக்கு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் லண்டன் கிளை உறுப்பினர் அல்வினின் நிதி பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-02)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.